பக்கங்கள்: பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 5 புதன்கிழமை (19-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:113

திட்டமிட்டபடி நேற்று ஜப்பான் பேச்சுக்கள் ஆரம்பம்

# புலிகளின் கடல்பயண ஏற்பாடு யுத்தநிறுத்த உடன்படிக்கையில்!

## அதற்குத் தாம் வழிகோலுவதாக பாலா தகவல்

ஹக்கோனி,மார்ச்19

ஆறாவது சுற்றுப்பேச்சுக்கள் திட்டமிட்டபடி நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஜப்பானின் ஹக்கோனி நகரில் உள்ள பிரின்ஸ் ஹோட்டலில் ஆரம்பமாகின. புலிகளின் சுதந்திரமான பாதுகாப்பான கடற்பயண ஏற்பாடுகளை யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்வதற்குத் தாம் வழிகோலிவரும் விடயத்தை பேச்சுக்கள் ஆரம்பமாவதற்குச் சற்று முன்னர் புலிகள் தரப்புக் குழுத் தலைவரும் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கு கடலில் விடுதலைப்புலிகளின் கப்பல்கள், கலங்கள் தடையின்றிப் பயணம் செய்வதற்கு வழி செய்யும் விதத்திலான ஏற்பாடுகளை யுத்த நிறுத்த உடன்பாட்டில் இணைத்துக்கொள்வது குறித்து இந்தப் பேச்சுக்களில் ஆராய்வோம்" - என்று பாலசிங்கம் செய்தியாளர்களுடன் உரையாடிய போது தெரிவித்தார்.

ஹக்கோனி பிரின்ஸ் ஹோட்டலில் நேற்றுக்காலை 8 மணிக்கு இலங்கை விடயங்களுக்குப் பொறுப்பான ஜப்பா

(13 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று ஜப்பானில் அன்ரன் பாலசிங்கமும் ஜப்பானின் விசேட தூதர் அகாஷியும் சந்தித்துப் பேச்சு நடத்திய போது எடுக்கப்பட்டபடம்.

## நெருக்கடி நிலைமைகளில் விரைந்து செயற்பட

# கண்காணிப்பு குழுவுக்கு புதிதாக அதிகாரங்கள்

### மூளாய் ஆஸ்பத்திரி தரம் உயரும்

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியை நவீன வசதிகள்கொண்ட பொது மருத்துவமனையாக தரமுயர்த்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நவீன கண்சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு ஆகிய வசதிகளுடன் மூளாய் ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்யுமாறு சுகாதார அமைச்சுக்கு பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார்.

நேற்று கொழும்பில் பிரதமரைச் சந்தித்து பேசிய இந்துவிவகார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் பிரதமர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## முதல் நாள் பேச்சுக்களில் அரசு – புலிகள் இணக்கம்

- ஜப்பானிலிருந்து ந.வித்தியாதரன் -

ஹக்கோனி,மார்ச்19

**அரசுத் துருப்புகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடலிலும் தரையிலும் ஏற்படும் மோதல்கள் - பிணக்குகள் போன்றவற்றைத் தவிர்க்கவும் அவை தொடர்பாக தீர்மானங்களை எடுக்கவும் வசதியாக கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரங்கள், பொறுப்புகள், வரையறைகளை மேம்படுத்த அரசும் புலிகளும் முடிவுசெய்துள்ளனர்.**

நேற்று அரசுத் தரப்புக்கும் புலிகளுக்கும் இடையில் ஜப்பானில் ஹக்கோனி நகரில் ஆரம்பமான ஆறாவது சுற்று அமைதிப் பேச்சுகளின் முதலாம் நாள் முதல் அமர்வில் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இத்தகவலை வெளியிட்டார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)



ஹக்கோனி நகரில் நேற்று 6 ஆவது சுற்று பேச்சுக்கள் ஆரம்பமாகியபோது பேச்சு மேசையில் இருதரப்பு பிரதிநிதிகளும் அமர்ந்திருந்த காட்சி.

(மேலும் பல படங்கள் 3 ஆம் பக்கத்தில்)

## ஈராக் போர் மூண்டாலும் இறுதி ஆட்டம் நடக்கும்

டேபன்,மார்ச்19

வளைகுடாவில் எந்தவேளையும் போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியிருப்பதை அடுத்து உலகின் கவனம் அங்கே திரும்பியிருக்கிறது.

உலகைப் பரபரப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகள் போர் மூண்டால் என்னவாகும் என்ற கேள்வி கிரிக்கெட் ரசிகர்களிடையே எழுந்திருக்கிறது.

ஈராக் மீது போர் வெடித்தாலும் உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா - கென்யா ஆட்டமும், இறுதி ஆட்டமும் திட்டமிட்டபடி நடக்கும் என உலகக் கிண்ணப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் கூறியுள்ளனர்.

ஈராக்குக்கு அமெரிக்கா விடுத்துள்ள கெடு வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. அதேநாளில் கென்

(14 ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்காவுக்கு எதிராக நடத்த இருக்கும் போரில் ஈராக் படைகளை வழிநடத்தவுள்ள அதிபர் ஹுசைனின் மூத்த புதல்வர் உதே ஹுசைனையே படத்தில் காண்கிறீர்கள்.

## இடிந்து வீழ்ந்த சுவரினுள் நசியுண்டு சிறுவன் பலி!

### நகரப் பகுதியில் பரிதாப சம்பவம்



யாழ்ப்பாணம்,மார்ச்19

இடிந்துவீழ்ந்த சிமெந்து சுவரினுள் சிக்குண்டு சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் வசிக்கும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி 7ஆம் தர மாணவனான குமர குருபரசுந்தரம் ஜனோஷன் (வயது 13) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தான்.

நேற்று முற்பகல் வேளை சிறுவனின் தந்தையார் வாழைக்குலை ஒன்றை வெட்டியபோது வாழைமரம் சாய்ந்து கிணற்றின் ஆடுகால் சுவர்மீது வீழ்ந்தது என்றும் -

அதனால் பாரம் தாங்காது சுவர் இடிந்துவிழ அருகே நின்றிருந்த சிறுவன் அதற்குள் சிக்குண்டான் என்றும் கூறப்படுகிறது. சிறுவனின் தலைப் பகுதி சிதைந்து காணப்பட்டது.

பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று பார்வையிட்டார். பொலீஸாரும் அங்கு வந்து விசாரணை நடத்தினர். (ஐ-9)

## கடத்தப்பட்ட இளம்பெண் மயங்கிய நிலையில் மீட்பு!

### சாவகச்சேரியில் பரபரப்பு

தென்மராட்சி,மார்ச்19

இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்படும் இளம் பெண் ஒருவர் பின்னர் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

சாவகச்சேரி, பெரியமாவடி பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

உறவினர் வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து கிளம்பிய அந்த யுவதியை வீதியில் வைத்து இளைஞர்கள் சிலர் ஓட்டோ

(14 ஆம் பக்கம் பார்க்க)



ஈராக் மீதான தாக்குதல் எந்த நேரமும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுவதால் அங்கு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். வடக்கு ஈராக்கிலிருந்து மூடை முடிச்சுகளுடன் வெளியேறிச் செல்லும் குர்திஷ் குடும்பம் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

### ஈராக் நிராகரிப்பு

வாஷிங்டன்,மார்ச்19

அதிபர் சதாம் ஹுசைனும் அவரது புதல்வர்களும் 48 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற அமெரிக்காவின் காலக்கெடுவை ஈராக் நிராகரித்துவிட்டது. ஒரு நாட்டின் அதிபரை வெளியேறச் சொல்ல அமெரிக்க அதிபருக்கு என்ன அதிகாரம் உள்ளது என்றும் ஈராக் கேள்வி எழுப்பியுள்ளது.

இத்தகவலை ஐநாவுக்கான ஈராக் தூதர் மகமூத்அல்தௌரி தெரிவித்தார். படைபலம் மூலமும் விரட்டியும் சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து அகற்றி விடலாம் என்று அமெரிக்கா தப்புக் கணக்குப் போடுகிறது. ஆனால், அது மிகப் பெரிய தவறு செய்துவிட்டது என்பதை காலம் உணர்த்தும் என்றும் அவர் சொன்னார். (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**MICRO PC SYSTEMS**
கணனி விற்பனை பழுதுபார்த்தல் பராமரிப்பு
intel IBM Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

# கென்ய கிரிக்கெட் அணி கிண்ணத்தை வெல்லும்!

## பயிற்றுநர் பட்டீல் தெரிவிப்பு

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் கென்ய அணி சாம்பியனாகும் என அதன் பயிற்றுநர் சந்தீப் பட்டீல் கூறியுள்ளார்.

டெஸ்ட் அந்தஸ்தற்ற அணியான கென்யா, இம்முறை அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்று அனைவருக்கும் ஆச்சரியமளித்துள்ளது. அவ்வணி நாளை இந்தியாவுடன் மோதுகிறது.



இதுகுறித்து கென்ய அணியின் பயிற்றுநரான இந்தியாவைச் சேர்ந்த சந்தீப் பட்டீல் கூறியுள்ளதாவது:-

அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவைக் கென்யா வெற்றிபெறும் அதே வேளை, ஆஸ்திரேலியாவை இலங்கை தோற்கடித்தால், இறுதிப் போட்டியில் எங்களால் இலங்கையைத் தோற்கடிக்க முடியும். இதை நாங்கள் ஏற்கனவே சாதித்திருக்கிறோம். இம்முறையும் அதனைச் செய்ய முடியும்.

எதிராளிக்கு நிர்ப்பந்தம் கொடுத்து தவறு செய்யத் தூண்டும் விதத்தில் விளையாடுமாறு வீரர்களை அறிவுறுத்தியுள்ளேன்.

இந்திய அணிக்கு எதிர்மறை சிந்தனை உள்ளது. எதற்காக 7 துடுப்பாட்ட வீரர்கள் வைத்திருக்கிறார்கள் எனத் தெரியவில்லை.

சச்சின், ஷேவாக், கங்குலி, கைஃப், திராவிட், யுவராஜ் சிங் ஆகியோரால் செய்யமுடியாததையா மொங்கியா செய்யப்போகிறார்?

இந்தியா இதுவரை ஐந்தாவது பந்துவீச்சாளர் இல்லாமலே விளையாடி வருகிறது. இதுவரை அக்குறை வெளிப்படவில்லை. ஆனால், சில சூழ்நிலைகளில் இதுவே பலவீனமாகலாம்.

சில நாள்களில் 3 பந்து வீச்சாளர்களைக் கொண்டு எதிரணியைச் சுருட்ட முடியும். வழக்கமாக 4 பந்து வீச்சாளர்கள் கூட போதாது. ஐந்தாவது பந்துவீச்சாளர் அவசியம் தேவை.

இந்தியா - கென்யா இடையேயான ஆட்டம் ஏதேனும் ஒரு தரப்பு ஆட்டமாகத்தான் இருக்கும். ஒன்று எங்களை மிக அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெல்லும். இல்லையேல் நாங்கள் மிக அதிக வித்தியாசத்தில் வெல்லுவோம். நிச்

(13 ஆம் பக்கம் பார்க்க)




SHARP Action of the day



கில்கிறிஸ்ட் ஆட்டமிழக்கும் தருணம்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS
Browns Group of Companies

# கலங்கடித்தார் லீ!

உலகக் கிண்ணத் தொடரின் முதல்சுற்று ஆட்டத்தின் போது தென்னாபிரிக்க அணியின் கனவுகளை மழை வந்து கழுவிச் சென்றது. அப்போது தென்னாபிரிக்கர்கள் விட்ட கண்ணீர் மற்றொரு பெருமழை. மீண்டும் அதே கண்ணீர் மழையை வரவழைத்தது நிஜ மழை. இம்முறை தென்னாபிரிக்கர்களுக்குப் பதிலாக இலங்கையர்கள் அழுதார்கள். கனவுகளும் கற்பனைகளும் தகர்ந்து தூள்தூளாகின.

நேற்று நடந்த உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்தின் பின்னர் இவையெல்லாம் நடந்தேறின. வாங்கி வைத்திருந்த வெடிகளெல்லாம் தென்னாபிரிக்காவில் பெய்த மழையில் ஊசிப் போய்விட்டன என்றார் நண்பர் ஒருவர். எதிர்பார்ப்புக்களில் மண் விழுந்து விட்டது. ஆனாலும், இலங்கை அணித் தலைவரிடம் அத்தனை சோகம் தெரியவில்லை. அரையிறுதி வரை போராடி முன்னேறிய திருப்தியே தெரிந்தது.

மீண்டும் ஒருதடவை தாம் ஜாம்பவான்கள் என்பதை நிரூபித்தார்கள் ஆஸ்திரேலியர்கள். நாணயச் சுழற்சியில் ஜெயசூரிய தலைகோர வீழ்ந்தது பூ. துடுப்பாடுவதற்குத் தீர்மானித்தார் பொன்ரிங். வென்றிருந்தால் தானும் அதனையே செய்திருப்பேன் என்று அவர் முடிவை ஆதரித்தார் ஜெயசூரிய.

இரு அணிகளிலும் மாற்றம் தெரிந்தது. இலங்கை அணியில் வாஸ், புலஸ்தி, முரளி ஆகியோரே பிரதான பந்துவீச்சாளர்கள். துடுப்பாளர் வரிசை பலமாக்கப்பட்டு 8பேர் இணைக்கப்பட்டிருந்தனர். ஸிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் இருந்த [illegible] இருந்து, தில்கார நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக [illegible] சேர்க்கப்பட்டிருந்தார். ஆஸ்திரேலியாவில் கென்யாவுடன் நடந்த ஆட்டத்தில் இருந்த மார்ட்டினுக்குப் பதில் [illegible] இணைக்கப்பட்டார்.

[illegible]வீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தில் ஓட்டங்களைக் குவிப்பது சாத்தியமற்றது என்ற நிலையில் களமிறங்கியது ஆஸ்திரேலியா. வியக்க வைத்தது. ஆரம்ப ஆட்டக்காரர் கில்கிறிஸ்டும் ஹைடனும் அதிரடியாக ஆடினர். ஓட்டங்கள் குவிந்தன. ஆரம்பப் பந்துவீச்சாளர் புலஸ்தி குணரத்னவின் முதல் இரு ஓவர்களில் விளாசப்பட்டவை 14 ஓட்டங்கள். 2ஆவது ஓவரில் கில்கிறிஸ்ட் அடித்த அபாரமான சிக்ஸ் அதில் அடக்கம். [illegible] நமக்கு சாதகமாக இல்லை என்பதைப் பார்த்த ஜெயசூரிய, 5ஆவது ஓவர் முடிவிலேயே சுழல் பந்துவீச்சுக்குத் தாவினார். அரவிந்த தாக்குதலுக்கு அழைக்கப்பட்டார். தன் கடமையை செவ்வனே செய்தார் அவர். தன் 2ஆவது பந்தில் கில்கிறிஸ்டை 'பெவிலியனு'க்குத் திருப்பினார். அவரது பந்தை 'ஸ்வீப்' செய்ய முயன்ற கில்கிறிஸ்டின் கணிப்பு தவற, பந்து கால் காப்பில் பட்டு மட்டையை உரசி மேலே உயர்ந்தது போன்று தோன்றியது. ஓடிச்சென்று ஏந்திக் கொண்டார் சங்ககார. ஆட்டமிழப்புக்கு நடுவரிடம் முறையீடு போயிற்று. நிமிர்ந்து நின்ற நடுவர் ரூடி கோர்ஸ்டன், ஆட்டமிழப்பு இல்லை என்று மறுத்தார். ஆனால், அவரது முடிவுக்கு காத்திராமல் 'பெவிலியன்' நோக்கி நடக்க ஆரம்பித்திருந்தார் கில்கிறிஸ்ட். 6ஆவது ஓவரில் 35 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட் இழப்பு.

வந்தவர் அணித் தலைவர் ரிக்கி பொன்டிங். வாஸின் வேகங்குறைந்த பந்தொன்றை தூக்கி அடித்தார். பந்து உயரே எழுந்தது. 'மிட்ஓவ்' திசையில் நின்ற ஜெயசூரிய, ஓடிச் சென்று இடப்புறம் பாய்ந்து வீழ்ந்து பந்தைப் பிடித்துக் கொண்டார். அணி அடுத்த இரண்டு ஓட்டங்களை தாண்டுவதற்குள் இரண்டாவது விக்கெட் வீழ்ச்சி. வெளியேறிய பொன்டிங்கைத் தாண்டி உள்ளே நுழைந்தவர் டெரன் லீமன். மறுமுனையில் இரு 'பௌண்டரி'கள் அடங்கலாக 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹைடன், வாஸின் மற்றொரு வேகங்குறைந்த பந்தை விளாசப் போய் 'அவுட்'டானார். 'மிட் விக்கெட்' திசையில் நின்ற திலகரத்ன, தலைக்கு மேல் உயர்ந்து வந்த பந்தை எம்பி ஒரு பிடிபிடித்துக் கொண்டார். வந்தவர் சைமன்ஸ். 15 ஓவர்கள் கடந்த போது அணி 3 விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்கள். நெருக்கடிக்குள் ஆஸி. அணி சிக்கிக் கொண்டது.

(13 ஆம் பக்கம் பார்க்க)



# கங்குலியின் கருத்து

"உலகக்கிண்ணத்தை நாம் நெருங்கிவிட்டோம்" - இவ்வாறு இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்குலி கூறியுள்ளார்.

டேர்பன் நகரில் அளித்த பேட்டியொன்றில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

"அணித்தலைவர் என்று வந்துவிட்டால், நான் கொஞ்சம் கண்டிப்பானவன். அதுவும், வீரர்கள் சரியாக விளையாடாவிட்டால், கடினமாகவே நடந்துகொள்வேன்.

காரணம், இது நீண்டநாள் பார்க்கக்கூடிய வேலை இல்லை. இந்திய அணியின் தலைவராக இன்னும் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் இருக்கமுடியும். அதற்குள் நல்ல பெயர் வாங்க வேண்டும். நான் தலைவர் பொறுப்பேற்ற பிறகு சில குறைகள் இருந்தாலும் மிகச் சிறப்பான பல வெற்றிகளையும் பெற்றிருக்கிறோம்.

உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் நுழைந்தது பெரிய விடயம். இலக்கை நாங்கள் மிகவும் நெருங்கிவிட்டதாகவே உணர்கிறோம்.

ஆனால், இறுதிப் போட்டிக்கு இன்னும் நுழையாத நிலையில், சாம்பியன் கிண்ணம் பற்றி கனவு காண விரும்பவில்லை. ஒருவேளை இறுதிப் போட்டிக்கு நாங்கள் தகுதிபெற முடியாமல் போனால் அதைவிட ஏமாற்றம் எனக்கு வேறெதுவும் இருக்க முடியாது. இறுதிப் போட்டியில் விளையாட வேண்டும் என்பது எனது நீண்டநாள் கனவுகளில் ஒன்று. இந்த முறை உலகக் கிண்ணத்தை ஜெயித்து நாடு திரும்பினால், என்ன கொண்டாட்டங்கள் நடக்கும் என்று எனக்குத் தெரியும். 83ஆம் ஆண்டு கபில்தேவ் அணி கிண்ணத்துடன் வந்தபோது, நடந்த கொண்டாட்டத்தை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

கிண்ணத்தை வென்று நாடு திரும்பினால், மிகப் பெரிய விருந்து இருக்கிறது. (ம-5)

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்!
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1#, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, [illegible] வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-[illegible] 360290,360291,074-512666

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# சவால்களுக்கு மத்தியில் மற்றொரு சந்திப்பு...



ஜப்பானின் விசேட தூதர் அகாஷியுடன் பாலா, அடேல்



அந்நியோன்னியமாக உரையாடிய வேளை...



புலிகள் தரப்புக்குழு




இரு தரப்பினரும் பேச்சு மேசைக்கு வந்து அமரத் தயாராக....



பேச்சு மேசையில் இரு தரப்பினரும் ...

# ஈராக் மீதான போர் நடவடிக்கை நாளை காலை ஆரம்பமாகலாம்!

## வெளிநாட்டு பிரஜைகள் வெளியேறுகின்றனர்

பக்தாத்,மார்ச்19

ஈராக் மீது போர் மேகங்கள் சூழத் தொடங்கிவிட்டன. ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனும் அவரது இரு புதல்வர்களும் ஈராக்கை விட்டு வெளியேற அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் 48 மணி நேர காலக்கெடுவை நேற்று விதித்ததன் மூலம் போருக்கான நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி புஷ் விதித்திருக்கும் காலக்கெடு நாளை வியாழக்கிழமை காலை ஆறு மணிக்கு முடிவுறும். இக்காலக்கெடுவுக்குள் ஈராக் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறாவிடின் காலக்கெடு முடிந்த ஒரு சில மணி நேரத்தில் அமெரிக்கா போரை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்கா விதித்திருக்கும் இந்தக் காலக்கெடுவை ஏற்க முடியாதென ஈராக் அறிவித்திருக்கின்றது. நேற்று தொலைக்காட்சியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி புஷ் இந்த காலக்கெடுவை அறிவித்தார். காலக்கெடு முடிவுற்றதும் ஈராக் மீது தாக்குதலுக்கான உத்தரவை வியாழக்கிழமை காலை புஷ் பிறப்பிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போர் மூளுவது உறுதியாகி விட்டதால் ஈராக்கிலுள்ள வெளிநாட்டவர்கள் அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

அத்துடன், அங்கு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஐ.நா. பரிசோதகர்களும் நேற்றுமுன்தினம் இரவு அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

ஈராக்கிலிருந்து வெளிநாட்டவர்கள் வெளியேறி வருவதால் ஈராக்கில் பெரும் பரபரப்பான சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஈராக் வட பகுதியிலுள்ள மக்களும் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். (ஒ)

### ஈராக்கிலிருந்து இந்தியர்கள் வெளியேறினர்

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பது உறுதியாகி விட்டதால், ஈராக்கிலிருந்து இந்தியர்கள் அனைவரும் வெளியேறத் தொடங்கிவிட்டனர்.

இந்தியத் தூதரக ஊழியர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் ஈராக்கிலிருந்து வெளியேறி விட்டதாக இந்தியத் தூதர் பி.பி. டியாகி தெரிவித்தார்.

ஞாயிறு இரவு டியாகி வீதி வழியாக அம்மான் சென்றடைந்தார்.

பக்தாத்தில் தற்போது இந்தியத் தூதரக ஊழியர்கள் யாரும் இல்லை.

12 இந்தியத் தொழிலதிபர்களைத் தவிர மற்ற அனைவரும் நாடு திரும்பி விட்டனர். சதாம் பல்கலைக்கழகத்தில் அராபிக் படித்துக் கொண்டிருந்த 15 இந்திய மாணவர்களில் ஒருவர் தவிர மற்ற அனைவரும் நாடு திரும்பி விட்டனர். எஞ்சியவர்கள் விரைவில் நாடு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# ராணுவத்தின் தலைமைப் பொறுப்பு மகனிடம் ஒப்படைத்தார் சதாம்!

டுபாய்,மார்ச்19

ஈராக் இராணுவத்தின் தலைமைப் பொறுப்புக்கு தமது புதல்வர்களில் ஒருவரையும் நம்பிக்கைக்குரிய 3 உதவியாளர்களையும் நியமித்துள்ளார் அதிபர் சதாம் ஹுசேன்.

போரை எதிர்கொள்ள தீவிர முனைப்பில் ஈராக் உள்ளது என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

இதனிடையே, பேரழிவு தரும் ஆயுதங்கள் ஈராக் குவித்து வைத்திருப்பதாக அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவை கூறும் புகாரை சதாம் ஹுசேன் ஞாயிற்றுக்கிழமையும் மீண்டும் மறுத்துள்ளார்.

போரை எதிர்கொள்ள ஆயத்தமாகி வரும் ஈராக் மறுபுறத்தில் தம்மிடம் உள்ள மேலும் 2 அல் சமூது ஏவுகணைகளை அழித்துள்ளது. இவற்றைச் சேர்த்தால் மார்ச் 1ஆம் திகதியிலிருந்து இதுவரை 70 ஏவுகணைகளை ஈராக் அழித்துள்ளது.

போருக்கான ஆயத்தங்களை அமெரிக்காவும், அதை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஈராக் மேற்கொண்டு வருகின்றன.

ஈராக் மீது தாக்குதல் நடத்தத் தயாராக பாரசீக வளைகுடா பகுதியில் அமெரிக்கா, பிரிட்டனைச் சேர்ந்த 3 லட்சம் படை வீரர்கள் தயாராக உள்ளனர்.

### உலகெங்கும் போர் பரவும்

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதன் எதிரொலியாக உலகெங்கும் பெரிய அளவில் போர் மூளும். அதற்கான நடவடிக்கைகளை ஈராக் மேற்கொள்ளும் என்று அதிபர் சதாம் ஹுசேன் எச்சரித்துள்ளார்.

இராணுவ தளபதிகள் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று ஈராக் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒரு மணி நேரத்தில் கூட போர் மூளக்கூடும் என்ற கருத்தோடு கடந்த ஒரு ஆண்டு காலமாகவே எமது மக்களைத் தயார்படுத்தி வந்துள்ளோம் என்று தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஈராக் துணை அதிபர் நாஜி சாப்ரி தெரிவித்துள்ளார். (ஐ)

### ஆஸ்திரேலியா ஆதரவு

சிட்னி,மார்ச்19

ஈராக் மீது அமெரிக்கா தொடுக்கவுள்ள போரில் தமது நாடு இணைந்து கொள்ளும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்ட் அறிவித்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள ஈராக்கிய ராஜதந்திரிகள் அனைவரையும் வெளியேறுமாறு ஆஸ்திரேலியா உத்தரவிட்ட சில மணிநேரத்தில் பிரதமரின் இந்த அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. (ஐ)

# ஈராக் போரை ஆதரிப்பதால் ரொனி பிளயருக்கு நெருக்கடி

## சுகாதார அமைச்சர் பதவி விலகினார்

லண்டன்,மார்ச்19

ஈராக் மீது பிரிட்டன் போர் தொடுக்க முடிவு செய்துள்ளதையடுத்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பிரிட்டன் சுகாதாரத் துறை அமைச்சர் லார்ட் ஹுண்ட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக பிளயர் அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்யும் இரண்டாவது அமைச்சர் இவர் ஆவார்.

பிரிட்டன் மக்களின் அனுமதி இல்லாமலும், சர்வதேச நாடுகளின் ஒப்புதல் இல்லாமலும் பிரிட்டன் தனது நடவடிக்கைகளைத் தொடங்குவதால் தனது பதவியைத் துறப்பதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை -

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் பட்சத்தில், பிரிட்டன் அதில் பங்கேற்பதா வேண்டாமா என்று முடிவு செய்ய பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் நடைபெறவுள்ளது.

இதனால் எப்போதும் சந்தித்திராத நெருக்கடி அந்நாட்டு பிரதமர் ரொனி பிளயருக்கு ஏற்பட்டுள்ளது.

ஈராக் மீதான போருக்கு அமெரிக்காவுக்கு பிளயர் ஆதரவு அளித்ததால் முதலில் வெளியுறவுத்துறை அமைச்சர் ராபின் குக் தனது பதவியை ராஜினாமா செய்தார். அவருக்கு அடுத்தபடியாக மற்றொரு அமைச்சரும் ராஜினாமா செய்துவிட்டார். (ஐ)

# யாழ்குடா நாட்டில்
## முதல் முறையாக

Annai Nagaa Food City

No.175, KKS Road, Jaffna.

# மகத்தான திறப்பு விழாவுக்கு

## எமது அன்பு கனிந்த
## நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக !

அத்தியாவசியப் பொருட்களை சந்தைப்படுத்துவோர்

Shaw Wallace Distributors

**SHAW WALLACE DISTRIBUTORS LTD.,**

353, Kollupitiya Road, Colombo - 03. Tel:01-573060-8




"The Brands You Know & Trust"

# உதயன்

## அதிபர் புஷ்ஷின் சர்வாதிகாரப் போக்கு

வளைகுடாவில் போர் மேகம் சூழ்கின்றது. உலகம் உடன்படாத போர் ஒன்றை வலிந்து தொடக்கும் முயற்சியில் வரிந்து கட்டிக்கொண்டு குதித்திருக்கிறார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ். ஈராக் மீது தாக்குதலை ஆரம்பிப்பதற்காக பல லட்சம் அமெரிக்கத் துருப்புகளும் நவீன போர்த் தளபாடங்களும் வளைகுடாவில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

போரைத் தவிர்ப்பதற்கான அமைதி முயற்சிகள், ராஜீக நடவடிக்கைகளுக்கான காலம் கடந்துவிட்டது என்று தெரிவித்திருக்கும் அதிபர் புஷ் , ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தனது நாட்டைவிட்டு குடும்பத்தினருடன் வெளியேறுவதற்கு இரு நாள் அவகாசம் வழங்கியிருக்கிறார். அப்படி அவர் வெளியேறாவிட்டால் போரைச் சந்திக்க நேரும் என்று எச்சரித்திருக்கிறார். அதிபர் புஷ், திங்கள் நள்ளிரவு முதல் வழங்கியிருக்கும் 48 மணிநேர அவகாசம் கடந்து கொண்டிருக்கிறது.

போரை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் ஈராக்கில் துவங்கிவிட்டன. தலைநகரிலிருந்து வெளிநாட்டு தூதரகங்களின் பணியாளர்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குழந்தை குட்டிகளுடன் பக்தாத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. போர் ஏற்படுத்தப்போகும் மனிதப் பேரவலம் ஆரம்பமாகிவிட்டதையே இது காட்டுகிறது.

ஈராக்மீது ஐ.நாவின் உடன்பாடின்றி அமெரிக்கா தொடுக்கவுள்ள போரை பிரிட்டனைத் தவிர பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான ஏனைய பிரதான நாடுகள் எதிர்க்கின்றன. ரஷ்யா, சீனா, பிரான்ஸ் போன்ற வல்லரசுகள் 'போர் வேண்டாம்' என்று ஒரேயடியாகக் கூறிவருகின்றன. இந்த நாடுகளிடமிருக்கும் 'வீற்றோ' அதிகாரம் அமெரிக்காவின் முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்கிறது. என்றாலும் இந்த முறை ஐ.நாவின் உடன்பாடு இன்றியே போரைத் தொடக்குவதற்கு அமெரிக்கா விடாப்பிடியாக நிற்கிறது.

'ஈராக் வசமுள்ள பேரழிவு ஆயுதங்களைக் கைப்பற்ற வேண்டிய தனது பொறுப்பிலிருந்து ஐ.நா. தவறுமானால் வரலாற்றில் இருந்து அது மறைந்துபோகட்டும்' - என்று கூறிவருகிறார் புஷ். தனது விருப்பத்துக்கு - முடிவுக்கு - உடன்பட மறுக்கும் ஐ.நாவை மாற்றியமைக்கப்போவதாகவும் அவர் மிரட்டல் தொனியில் கூறியிருக்கிறார்.

தனது மண்ணில் ஐ.நா. ஆயுத பரிசோதகர்களை ஈராக் ஏற்கனவே அனுமதித்திருக்கிறது. அமெரிக்கா கூறுவதுபோன்ற பேரழிவு ஆயுதங்கள் ஈராக் வசம் இல்லை என்று பிரதான ஆயுதப் பரிசோதகர் கூறிவிட்டார்.

ஈராக்கில் ஐ.நாவின் பணிக்கு மேலும் அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று பல நாடுகள் கூறுகின்றன. ஆனால் இந்தப் பொதுக் கருத்துக்கு அடிபணிய அமெரிக்கா மறுத்து வருகிறது.

அமெரிக்கா கூறுகின்ற பேரழிவு ஆயுதங்கள் உலகில் ஈராக்கிடம் மட்டும்தான் இருக்கிறன என்பதல்ல. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதாகக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா, தற்போது புதிது புதிதாகத் தயாரித்து வரும் ஆயுதங்கள்கூட பேரழிவை ஏற்படுத்திவிடக்கூடிய ஆயுதங்கள்தான்.

போர் என்று வந்துவிட்டால் அழிவு நிச்சயம். சமாதானத்தை நிலைநிறுத்தவும் அமைதியைக் கொண்டுவரவும் போர் ஒரு வழியாக இருக்கமுடியாது. ஒரு சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்ப்பதன்மூலம் பேரழிவு ஆயுதங்களின் அச்சுறுத்தல் உலகில் இருந்து நீங்கிவிடாது.

போர் தொடங்கினால் உலகின் எந்தப் பகுதிமீதும் தாக்குதல்கள் இடம்பெறும் ஆபத்து இருக்கிறது. போரினால் உலகப் பொருளாதாரம் ஆட்டங்கண்டு பல நாடுகள் நேரடியான பாதிப்புகளைச் சந்திக்கும் நிலை ஏற்படும்.

உலகப் பொருளாதாரத்தின் பிரதான மூலவளங்களில் ஒன்றான எரிபொருள் வளம் இருக்கின்ற பிரதேசம் போரில் சிக்குமானால் அது உலகின் ஒவ்வொரு நாட்டையும், ஒவ்வொரு பிரஜையையும் பாதிக்கப்போவது வெளிப்படை. எனவே, பேரழிவு ஆயுதங்களை அழிக்கப்போய் உலகிற்கு பேரழிவை ஏற்படுத்திவிட அமெரிக்கா முயற்சிக்கக்கூடாது.

பிரிட்டன் போன்ற நட்பு நாடுகளின் தயவுடன் ஐக்கிய நாடுகள் சபையை ஓரங்கட்ட அதிபர் புஷ் எடுக்கின்ற முயற்சிகள் உலகை மீண்டும் ஒரு கெடுபிடி யுத்த நிலைமைக்குத்தான் கொண்டுசெல்லும்.

மூன்றாவது உலகப் போர் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்காக உயர் நோக்கங்கொண்ட தலைவர்களின் சிந்தனையில் உதித்தது ஐ.நா. என்கின்ற உலகப் பொது மன்றம்.

நிதி மற்றும் நிர்வாக விடயங்களில் அது இன்று அமெரிக்காவின் தயவில் தங்கியிருக்கவேண்டி இருந்தாலும் அதன் நோக்கங்கள் பேணப்படவேண்டும்.

போருக்கு உடன்படாத காரணத்துக்காக ஐ.நாவை மாற்றியமைக்க அதிபர் புஷ் முயல்வாராயின் - அல்லது ஐ.நாவைப் புறந்தள்ளி சண்டப்பிரசண்டனாக நின்று ஈராக் மீது போரைத் திணிப்பாராயின் - நவீன உலகம் அவரை ஒரு சர்வாதிகாரியாகவே நோக்கும்.

## விடுமுறைகளில் கடைகளை மூடும்படி வர்த்தக ஊழியர்சங்கம் வேண்டுகோள்

யாழ்.நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.30மணியுடனும், ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் வர்த்தக விடுமுறை நாள்களில முழுநாளும் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு யாழ்.வர்த்தக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோளை ஏற்க மறுத்து மேற்குறிப்பிட்ட தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து ஊழியர்களை வேலைக்கு வரும்படி கட்டாயப்படுத்துவது ஊழியர்களின் உரிமையைப் பறிக்கும் செயலாகும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-10)

## தலைவரைச் சந்தித்தார் கேணல் பதுமன்

கிளிநொச்சி,மார்ச்19

வன்னிக்கு வருகைதந்திருந்த விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தலைவர் வே.பிரபாகரனுடன கலந்துரையாடியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட நிலை தொடர்பாக பதுமன் தலைவருக்கு எடுத்துக்கூறியுள்ளார்.

வன்னி விஜயத்தை முடித்துக் கொண்டு பதுமன் நேற்றுமுன் தினம் விமானப் படையின் ஹெலி மூலம் திருமலை திரும்பினார். (ம-3)

## மாதர் மான்மியம்

### நாடோ இது காடுதானோ?

கோடேறி அறியா நங்கை
கொழுநனை தொழுது வாழ்ந்தாள்
வீடே கோயிலாக கொண்டு
வித்தகி வாழ்ந்தாள் அன்று
காடேகி கசிப்புக் காய்ச்சி
கள்ளமாய் அதனை விற்று
சூடோடு கடலை சுண்டல்
சுந்தரி வழங்கி விட்டு
கோடேறி தெண்டம் கட்டும்
கொடுமையை கண்ட போது
நாடோ? இது காடுதானோ
நம்பிட முடியவில்லை!

- விகடகவி.

# 'நீர்மூழ்கி ஸ்கூட்டர்'களை புலிகள் டென்மார்க்கிடம் கொள்வனவாம்!

## பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி

கொழும்பு,மார்ச்19

சமாதானப் பேச்சுக்களுக்குச்சென்று திரும்பும்போது - கடந்த நான்கு மாதங்களுக்கு முன் - புலிகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 34 'நீர்மூழ்கி ஸ்கூட்டர்கள்' (Under Water Swoters) வன்னிக்குக் கொண்டுசென்றிருக்கிறார்கள். இவை டென்மார்க்கில் கொள்முதல் செய்யப்பட்டவை.

- இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்படி ஸ்கூட்டர்கள் நீருக்கடியில் அண்ணளவாக ஒரு மணித்தியாலத்தில் 3 மைல் என்ற வேகத்தில செல்லக்கூடியவை.

இவற்றுடன் அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களும் பேச்சுக்காக வெளிநாடு சென்ற புலிகளால் கொழும்பின ஊடாக வன்னிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இத்தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம கப்பல்களுக்கு இடையிலும் கப்பலுக்கும் கரைக்குமான தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

மேற்படி பொருள்கள் அனைத்தும கழற்றி துண்டு துண்டாக்கப்பட்டு 25 பொதிகளில் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டன. அங்கிருந்து இலங்கை விமானப்படையின் விஷேட ஹெலிகொப்டர்கள் மூலம் கிளிநொச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டன. இந்தப் பொதிகள் எந்தவித சோதனைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை. பொதிகளை ஏற்றிச் செல்வதற்கு மேலதிகமாக ஒரு ஹெலி கிளிநொச்சிக்கு சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

புலிகளால் கொண்டுவரப்பட்ட நீர்மூழ்கி ஸ்கூட்டர்கள் துறைமுகங்களில் தரித்து நிற்கும் கப்பல்களைத் தாக்குவதற்குத் தற்கொலைதாரி வாகனமாகப் பயன்படுத்தக்கூடியவை - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வீடு கட்டித்தர நடவடிக்கை

சண்டிலிப்பாய் (வலி.தென் மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள 50பயனாளிகளுக்கு வீடுகளை நிறுவிக் கொடுப்பதற்கு ஜீ.ரி.இசட் முன்வந்துள்ளது. ஒவ்வொரு பயனாளிக்கும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்புக்குத் தேவையான கட்டட உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. பயனாளியும் தமது பங்களிப்பை இதற்குச் செலுத்தவேண்டும். பெரியவிளான், மாசீன்கூடல், பண்டத்தரிப்பு, சுதுமலை,மானிப்பாய் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்தவர்களே இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இம்மாத இறுதிக்குள் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள். அவ்வப் பகுதி பொதுமக்கள் முன்னிலையில் இத்தெரிவுகள் நடைபெறும். சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா இத்தகவலை தெரிவித்தார். (ஒ-135)

## மரண தண்டனையை மீண்டும் கொண்டுவர அரசு எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை

### பிரதமரின் அலுவலகம் அறிக்கையில் விளக்கம்

கொழும்பு,மார்ச்19

மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதற்கோ அல்லது அது குறித்து ஆராய்வதற்கோ அரசு எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளவில்லை.

- இவ்வாறு பிரதமரின் அலுவலகம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிககப்பட்டிருக்கிறது.

மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்த அரசு தீர்மானித்திருப்பதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிவித்திருக்கும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சமூகப் பிரச்சினைகள் தொடர்பாகக் கட்சி பேதமின்றி, மனச்சாட்சிப்படி நாடாளுமன்ற விவாதங்களில் கருத்து வெளியிட சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என்பது சமீபத்தில் நடைபெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கொள்கையளவில் இணங்கப்பட்டது.

இந்த இணக்கத்தின்படி மரணதண்டனையை மீண்டும் அமுல்படுததுவதா, இல்லையா என்பது குறித்து ஒத்திவைப்பு விவாதம் ஒன்றை நடத்துவது பொருத்தமானதாகும் என்று ஜோன் அமரதுங்க யோசனை தெரிவித்தார்.

அந்த யோசனைக்கேற்ப, இது குறித்து ஒத்திவைப்பு பிரேரணை ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிககப்படும். அந்த விவாதத்தின் பின்னர் ஒரு சில மாதங்களுக்கு ஒரு தடவையாவது சமூகப் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற விவாதங்களை நடத்த நவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு அறிக்கை கூறுகின்றது. (ம)

### நாளை

பங்குனி 06
வியாழக்கிழமை
(20.03.2003)
திதி : துதியை
பிற்பகல் 12.37வரை.
நட்சத்திரம: சித்திரை
பின்னிரவு 12.45 வரை.
சுபநேரம் : 7.48 - 9.18
ராகுகாலம்: 1.48 - 3.18
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நடந்ததை நடவாததாக்க ஆண்டவனாலும் முடியாது. ஆகவே செய்பவற்றை சரியாகச் செய்யவேண்டும்.

## ஒன்றிணைக்கப்பட்ட உதவித்திட்ட நடைமுறைகள் குறித்து அறிவிப்பு

சொந்த இடங்களில் நிரந்தரமாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ் உதவி வழங்குவதற்கான நடைமுறைகள் யாழ்.அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பின்வருமாறு:-

ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ் குடும்பங்களின் மதிப்பீட்டு படிவம் வழங்கப்பட்டு அவை பூரணமாக பூரணப்படுத்தப்படவேண்டும்.

இத்திட்டத்தில் கொடுப்பனவு செய்யவேண்டியவர்களின் பெயர்கள் கிராமிய நல்லிணக்கக் குழுக்களினால் முன்னுரிமை ஒழுங்கில் சிபாரிசு செய்யப்பட்டு அலுவலக விளம்பரப் பலகையில் விளம்பரப்படுத்தப்படல்வேண்டும்.

விளம்பரப்படுத்திய பின்னர் இத்திட்டத்திற்கு சிபாரிசு செய்யப்பட்ட குடும்பத் தலைவருக்கு குடும்பப் பதிவு அட்டை வழங்கப்படவேண்டும்.

குடும்ப அட்டையில் கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும் முழுமையாக நிரப்பப்பட்டு குடும்பத் தலைவரின் கையொப்பம் பெறப்படவேண்டும்.

பயனாளிகள் கையொப்பம் இடவரும்போது குடும்ப அட்டையையும் தவறாது கொண்டுவரவேண்டும். குடும்பத் தலைவர் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர் எவராவது கையொப்பமிடக் கூடாது. இந்த நடைமுறைகள் சீராகப் பின்பற்றப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-76)

## வலி.மேற்கு பிரதேசத்தில் உபதானியப் பயிர்ச்செய்கை

வலி.மேற்கு,மார்ச்19

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் 200 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலேயே எள்ளு, பயறு போன்ற உபதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

600 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் எள்ளு, பயறு போன்ற உபதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் என திட்டமிடப்பட்டிருந்ததாகவும் -

நெல் அறுவடை, காலந்தாழ்த்தி மேற்கொள்ளப்பட்டதனாலும், ஈரலிப் புத்தன்மை இல்லாமையினாலுமே 200 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மட்டுமே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

200ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கையிலும் 160ஹெக்ரேயர் நிலப்பரப்பிலேயே எள்ளு, பயறு விளைவித்திருப்பதாக விவசாயப் போதனாசிரியர் எஸ். செல்வநாயகம் தெரிவித்தார். (ஒ-175)

## மனமெலாம் உருகுகின்றதைய்யா!

மூவுலகனைத்தையும் சிரிப்பினால் அழித்த
பெருமையை உணர்ந்திட்ட இமையோர்
பாவலர்கள், நாவலர்கள் அத்தனை பேருக்கும்
அபயமே அளித்திட்ட முதல்வா!
தேவியாந் தையல் வாலாம்பிகை தன்னை
மணஞ்செய்யும் காட்சியைக் கண்டும்
வீதியில் உலாவரும் காட்சியைக் கண்டும்
மனமெலாம் உருகுகின்ற தையா!

- கவிமணி கந்த முருகேசதாசனார்.

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பூங்காவனம் இன்று.

உ
சிவமயம்

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனித் திங்கள் 5ஆம் நாள் இன்று(19.03.2003) புதன்கிழமை முற்பகல் 8.49 மணிமுதல் 10.12 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**பிரபாகரன்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**சிவப்பிரியா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இல.24, சிங்கப்பூர், அரசகேசரி சிவன் கோயிலில் திருமணம் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். புதுமணமக்களுக்கு உங்களது ஆசீர்வாதத்தை வழங்கி வாழ்த்தியருளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி அ.குமாரசாமி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(இரு வீட்டார் அறிவிப்பு)

திரு.திருமதி தனபாலசிங்கம்,
கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(15596)

உ

# மாபெரும் மலிவு விற்பனை

## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து புடைவை வகைகளும் இன்று 19.03.2003 தொடக்கம் 29.03.2003 வரையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பாபர பிறிண் 60″ | - 50.00 | |
| சீத்தை இந்தியன் | - ~~50.00~~ | 40.00 |
| சீத்தை சையினா | - ~~65.00~~ | 55.00 |
| பப்பிளின் | - ~~60.00~~ | 50.00 |
| பிரிண் | - ~~110.00~~ | 90.00 |
| சேட்டிங் செக் L/C | - ~~130.00~~ | 110.00 |
| சேட்டிங் செக் D/C | - ~~140.00~~ | 120.00 |
| கேட்டின் லேஸ் 60″ | - ~~140.00~~ | 110.00 |
| சலஞ்சர் பிளேன் 36″ | - ~~80.00~~ | 70.00 |
| சலஞ்சர் பிளேன் 44″ | - ~~90.00~~ | 80.00 |

| | | |
|---|---|---|
| சேட் - பெட்டி | - ~~550.00~~ | 350.00 |
| | ~~725.00~~ ~~700.00~~ ~~695.00~~ ~~650.00~~ | 500.00 |
| T.சேட் பெரிது | ~~525.00~~ | 400.00 |
| T.சேட் சிறிது | ~~345.00~~ | 250.00 |
| T.சேட் சிறிது | ~~425.00~~ | 300.00 |
| பிளவுஸ் வகைகள் | ~~350.00~~ | 275.00 |
| பிளவுஸ் வகைகள் | ~~450.00~~ | 350.00 |
| இன்ரகூலர் பிளேன் | ~~110.00~~ | 100.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சாறி வகைகள் | ~~525.00~~ | 390.00 | ~~350.00~~ | 250.00 | ~~450.00~~ | 300.00 |
| ஸ்கேட் அன் பிளவுஸ் | ~~1250.00~~ | 1000.00 | ~~650.00~~ | 500.00 | | |
| பேபி சூட் வகைகள் | ~~300.00~~ | 275.00 | ~~450.00~~ | 350.00 | ~~425.00~~ | 300.00 |
| சூட்டிங் (லெந்) | ~~225.00~~ | 140.00 | ~~400.00~~ | 300.00 | ~~430.00~~ | 350.00 |

மேலும் பலவகையான புடைவை வகைகளும் இதே மாதிரியான மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்:

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**

44, 42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2985

(15710)

## மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோவில்

### மஹோற்சவ கால கடைகள் அமைத்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 29.03.2003 சனிக்கிழமை முதல் 15.04.2003 செவ்வாய்க்கிழமை வரை நடைபெற இருப்பதால் இந்த நாள்களில் ஆலய சூழலில் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் 23.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தந்து தங்கள் கடைகளுக்குரிய பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்று வியாபாரத்தை நடத்தவும்.

18. 03. 2003

தர்மகர்த்தாசபை
மருதடி விநாயகர் திருக்கோவில்
மானிப்பாய்.

(15702)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

தாயின் மடியில்
05
-
12
-
1938



இறைவன் திருவடியில்
17
-
02
-
2003

## அமரர் தம்பிராசா சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய வேலை பார்வையாளர்)

*உன்னத உறவொன்றாய்*
*உண்மைகளைத் தந்துவிட்டு*
*மரணம் மருணிக்காது என்பதை*
*நீயும் சொல்லிப் போனாயோ?*

தெய்யாகலட்டி,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

நின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-37002)

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 38**

நாளை (20.03.2003)நடைபெறவுள்ள இந்தியா - கென்யா அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் சதம் அடிப்பாரா?

முழுப்பெயர் : ..............................................
முகவரி : ..............................................
அ. அட்டை எண்: ..............................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (20.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 38 , உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

**உதயன்**



## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**'அருணன்ஸ்' தரும் பரிசு - 02**

இந்தியா - கென்யா அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் கென்ய அணி 150 ஓட்டங்களுக்கு மேல் பெறுமா?

..............................................
முழுப்பெயர் : ..............................................
முகவரி : ..............................................
அ. அட்டை எண்: ..............................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (20.03.2003) நண்பகல் 1மணிக்குள் 'அருணன்ஸ்' தரும் பரிசு - 2, உதயன் பணிமனை, 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
**தொலைக்காட்சி**

முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
**கணனி**

விசேட பரிசுகள்
அருணன்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
**கூப்பன்கள்**



ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

Super Six பரிசு
ஜுமாலா நிறுவனம் தரும்
**சைக்கிள்கள்**

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
**வானொலி**

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
**கழிவுக் கூப்பன்கள்**

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல்நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணன்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# திருமண வாழ்த்து

மணமகன் **இராசகுமார் (ராசன்)** மணமகள் **விஜிதா (விஜி)**

15-03-2003 சனிக்கிழமை அன்று
மங்களகரமாக இல்லற வாழ்வில்
ஒன்றிணைந்த தம்பதியினரை
பலநலமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, அத்தான், தம்பி.

(15700)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 09 - 1936

மறைவு 21 - 03 - 2000



## திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்

திதி (19-03-2003) பிரதமை

மண்ணுலகில் வாழ்ந்து விட்டு
மாண்டவரும் வருவதில்லை
மீண்டொருகால் காண்போமா?
முந்நூறு நாள் சுமந்த அன்னையே!
மூன்றாண்டு ஆவுதம்மா
உங்கள் முகம் நாம் பார்த்து.

*என்றும் உங்கள் நினைவோடு*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்:*

கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இ.பரராஜசிங்கம்,
42,புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.

(15682)

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி ஞா.மங்களேஸ்வரி

(மாலா)

மலர்வு: 05-05-1967

உதிர்வு: 07-02-2003

07-02-2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச்செய்தி அறிந்து தொலைபேசி, கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு துயர் பகிர்ந்தவர்களுக்கும் அனைத்து உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19-03-2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் (உதயசூரியன் வீதி, வல்வெட்டித்துறை) நடைபெறும். இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*உதயசூரியன் வீதி,*
*வல்வெட்டித்துறை.* (15440)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

## கள்ளுத் தவறணை அராலியில் தீக்கிரை

அராலி,மார்ச்19

கடந்த 9ஆம் திகதி இரவு அராலி மத்தி ஊரத்திப் பகுதியில் உள்ள சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கள்ளுத்தவறணை விஷமிகள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.இதனால் சீவல் தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(எ-16)

## மருதடி ஆலய மஹோற்சவம்

சண்டிலிப்பாய்,மார்ச்19

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 7ஆம் திகதி மஞ்சத்திருவிழாவும், 13ஆம்திகதி சப்பரத் திருவிழாவும், 14ஆம் திகதி புது வருடப் பிறப்பன்று தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உற்சவ தினங்களின் மாலை நேரத்தில் 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகன் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பகல் உற்சவம் முடிவடைந்ததும தினமும் அடியார்களுக்கு அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர். (ஒ-135)

## அழகெழல் போட்டி

அழகியல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற துறைகளுக்கான 'அழகெழல் போட்டிகள்' நடைபெறவுள்ளன.

இன்று காலை 9 மணி தொடக்கம் சித்திரம், நாடகம் ஆகிய போட்டிகளும் நாளை காலை 9மணி தொடக்கம் சங்கீதம், நடனம் ஆகியவற்றுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இசை, நடனம், நாடகப் போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்கள மதிய உணவுடன் சமுகந்தரும்படி போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

ஓம் கணபதி துணை

# முதலாவது பிறந்தின வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



## செல்வி புவனேஸ்வரன் அபரணா

வட்டுக்கோட்டை கொட்டுடை முருகன் கோயிலடியைச் சேர்ந்த திரு.திருமதி புவனேஸ்வரன் - சரோஜா தம்பதிகளின் செல்வப் புதல்வி

## அபரணா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (19.03.2003) புதன்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அபரணாவை அன்பு அப்பா, அம்மா, பவி அக்கா, அப்பம்மாமார், அம்மம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தம்பி பானுகரன், உற்றார், உறவினர் அனைவரும் இறைவனின் திருவருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடித்த ஆயுளுடன் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றார்கள்.

*கொட்டுடை,*
*வட்டுக்கோட்டை.* (15637)

தகவல்: மா.புவனேஸ்வரன் (அப்பா).

## தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம்

# முக்கிய அறிவித்தல்

எமது 16.03.2003 கூட்டத் தீர்மானத்திற்கும் முடிவுக்கும் அமைய புதிய வாகனப்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

17.03.2003 (C-26999) -நிர்வாகம்.


# ATLAS

யாழ். கொடிகாமம் கொழும்பு

## Communiction & Lodge

உள்நாட்டு, வெளிநாட்டு தொடர்புகளை துல்லியமாகவும், குறைந்த கட்டணத்திலும் சிறந்த முறையில் உரையாட நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் (24 மணி நேர சேவை).

**"எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி"**

வெகுவிரைவில் யாழ்.நகரில் இயங்கி வரும் எமது நிறுவனத்தில் சகல வெளிநாட்டு அழைப்புக்களுக்கும் ஒரு நிமிடம் 10/- மட்டுமே என்பதனை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## A/C, Non A/C, Semi Luxury Bus & Van Service

**குளிரூட்டப்பட்ட பஸ் சேவை**

யாழ்.-கொழும்பு (செவ்வாய், புதன், சனி) கொழும்பு - யாழ். (புதன், வியாழன், ஞாயிறு)

**வான் தினசரி சேவை**

☆ உங்கள் இருப்பிடத்திலிருந்து தங்குமிடம் வரை ஏற்றிச் செல்லப்படும்.
☆ கொழும்பிலிருந்து வறணி - நெல்லியடி - பருத்தித்துறை ஊடாக யாழ்.வரையான சேவை.
☆ ஒரே நாளில் சிறிய பொதிகள் உரிமையாளரின்றி அனுப்பி வைக்கப்படும்.

**மற்றும் எமது சேவைகள்**

☆ யாழ்.-கொழும்பு, கொழும்பு - யாழ். விமான பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும் (Lion Air, Expo, Serendib)
☆ கணனி முறை மூலம் Type Setting செய்து பெற்றுக்கொள்ளவும்
☆ சௌகரியமான தங்குமிட வசதியைப் பெற்றுக்கொள்ளவும்
☆ பொதிகளைக் கொண்டு செல்லக்கூடிய வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் **Atlas International Association**

Note: (எமது வாகன சேவையின்போது தங்களுக்குரிய தேவைகள் நிறைவேற்றப்படாதவிடத்து தங்களின் முறைப்பாடுகளை கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் அந்த முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்படும் என்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றேன். தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள விரும்பின் தொலைபேசி இலக்கம்: 0777744863)

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது நிறுவனத்தின் கிளை புதிதாக கொடிகாமத்தில் இன்று (19-03-2003) புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றேன்.

மேலதிக விவரங்களுக்கு: ATLAS INTERNATIONAL ASSOCIATION

| கொழும்பு | யாழ்ப்பாணம் | கொடிகாமம் |
|---|---|---|
| இல.127, சென்றல் றோட், | இல.77, கே.கே.எஸ்.றோட், | இல.01, கண்டி வீதி, |
| கொழும்பு - 12. | யாழ்ப்பாணம். | கொடிகாமம். |
| T.P.: 01-431498 | T.P.: 021 - 222 - 2557 | T.P.: 021 - 2263400 |

(15709) - நிர்வாகி

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **Yamaha Sports Model** மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அம்பலவாணர், 91, டேவிட் றோட், யாழ்ப்பாணம். (15704)

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். **(Electronic** நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15588)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. **(1Kg - 125/-)** சுத்தம்செய்து வேண்டிய நிறைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, **T.P. 2867, 3529.** (15723)

## தவறிவிட்டது

புலோப்பளை மேற்கு, பளை என்ற முகவரியுடைய த.வவிகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.811333190V), விசேட அடையாள அட்டை என்பன நவாலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (15696)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் 1973, குற்றமற்ற கேட்டை, அரச பணியாற்றும் மகளுக்குப் பொருத்தமான (உள்ளூர்/U.K ஆஸ்திரேலியா) மணமகனைத் தேடுகின்றனர். பூரண விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1821, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (15697)

## ச.ச.நிலையங்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்19

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கொக்குவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் செ.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

நுளம்புத்தொல்லை, டெங்கு காய்ச்சல் பரவாது தடுத்தல், முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகள், நூலக வாரம் ஆகிய விடயங்கள் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் - தமது சனசமூக நிலையப் பகுதியில் இந்த விடயங்கள் குறித்த முழு விவரங்களுடனும் நிர்வாக உத்தியோகத்தர், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-180)

## 6 பேருக்கு அபராதம்

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் ஆறுபேருக்கு யாழ்நீதிமன்றினால் 39 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரியாலை வீதியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் பிரான்ஸிஸ் குணநாயகம் என்பவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் - யாழ்.மடம் வீதியைச் சேர்ந்த நவம் அன்ரன் றோமசூரிய என்பவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் -

குருநகர், கடற்கரை வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பாகிந்தன் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபாவும் - யாழ்.இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த சகாயராஜா செல்வநாயகம் என்பவருக்கு 2ஆயிரம் ரூபாவும் -

யாழ்மானிப்பாய் வீதியைச் சேர்ந்த இராஜதுரை சுதாகரன் என்பவருக்கு 4 ஆயிரம் ரூபாவும் -

யாழ்.ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த கந்தையா இராஜலிங்கம் என்பவருக்கு ஆயிரம் ரூபாவும் -

அபராதமாக செலுத்துமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டுள்ளார்.(ஒ-10)

## ஆன்மீக நிகழ்வு

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் இந்துமன்றம். இந்து சமய விவகார அமைச்சின் யாழ்.அலுவலகத்துடன் இணைந்து நடத்தும் ஆன்மீக நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆன்மீக உரைகள், பக்தி இசை ஆகியவை இடம்பெற உள்ளன. (ஒ)

# கல்லோயாவிலிருந்து சிமெந்து ஏற்றிவந்த லொறி எங்கே?

அக்கரைப்பற்று,மார்ச்19


சிமெந்து நிறுவனம் ஒன்றின் கல்லோயா களஞ்சியசாலையில் இருந்து கடந்த 11ஆம் திகதி 225 சிமெந்து பைகளுடன் நிந்தவூரை நோக்கி சென்ற லொறியைக் காணவில்லை.

அந்த லொறி இதுவரை வந்த சேராததால் அது கடத்தப்பட்டதா அல்லது சாரதி லொறியுடன் தலைமறைவாகி விட்டாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

லொறியிலிருந்த சிமெந்தின் மொத்த விலை 85,575 ரூபா என்று கொள்வனவு செய்த நிறுவனத்தின் உரிமையாளர் எம்.பி.சம் சுடீன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் சம்மாந்துறைப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் கமலமோகன் ஜெனித்தன்


பின்லாந்தில் வசிக்கும் **மோகன் - சுதர்சினி** தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் **ஜெனித்தன்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.03.2003) புதன்கிழமை பின்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை புன்னாலைக்கட்டுவனில் வசிக்கும் அன்புத் தாத்தா, அம்மம்மா, மாலி சித்தி, நளா சித்தி, னோனி சித்தி மற்றும் இந்தியாவில் வசிக்கும் அப்பம்மா, கொக்குவிலில் வசிக்கும் கலா பெரியப்பா, பெரியம்மாமார், அக்காமார் மற்றும் மாமாமார், அத்தைமார், அண்ணாமார், பெரியப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் முழங்காவிலில் வசிக்கும் சித்தப்பா, அன்ரி அனைவரும் இவரை ஆயாக்கடவை ஐங்கரன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,* தகவல்:
*புன்னாலைக்கட்டுவன்.* (15725) சி.கந்தசாமி (துரையர் - தாத்தா)

## உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும்

திருத்த வேலைகளுக்காக எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களை எதிர்வரும் 25.03.2003ஆம் திகதிக்கு முன்னர் உடனடியாக வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செல்வா வோச் அன் எலக்ரோனிக்ஸ்**
**இல.60, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(C 26998)



உ
சிவமயம்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு, இலங்கை

### அறிவித்தல்

இலங்கை அரசாங்கத்தில் பதிவு பெற்றதும், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 1917ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நம்பிக்கைச் சொத்துக் கட்டளைச் சட்டத்தின் 99ஆம் பிரிவின் கருத்திற்கு உட்பட்டவாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுமான "நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்" என்னும் பெயரில் உலகில் எந்த ஓர் இடத்திலும் ஆலயம் அமைத்துச் செயற்படுவதற்கோ, நிதியோ அன்றிப் பொருள்களோ வசூல் செய்வதற்கோ, எந்தவொரு தனிநபருக்கோ, நபர்களுக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ மேற்படி சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையினரால் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பதனை இத்தால் சகல பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இதனை மீறி நடக்கும் தனி நபருக்கோ, நபர்களுக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். பிறநாடுகளிலோ அல்லது உள்நாட்டிலோ இவ்வாறான செயலில் ஈடுபடும் எவருக்கும் நிதியுதவி அல்லது பொருளுதவி அளிக்க வேண்டாமெனப் பொதுமக்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நிதியுதவி செய்யவிரும்பும அடியார்கள் கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் வங்கிக் கணக்குகளுக்கோ அன்றி "பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபை, நயினாதீவு, ஸ்ரீலங்கா" என்னும் முகவரிக்கோ நேரடியாக அனுப்பி வைக்கலாம் என்பதனை அறியத்தருவதோடு, வங்கி மூலமாகப் பணத்தினை அனுப்புவோர் அது பற்றிய விவரத்தினை எமக்கு அறியத்தரும் பட்சத்தில் நிதிக்குரிய பற்றுச்சீட்டினை அனுப்பி வைக்க எமக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்பதனையும் அறியத்தருகின்றோம்.

1. Commercial Bank of Ceylon Ltd., Pettah, Colombo A/C 01-2426285-01
2. Commercial Bank of Ceylon Ltd. Hospital Road, Jaffna. A/C 1060012330.

கு.சரவணபவானந்தன் (ஜே.பி.)
கௌரவ செயலாளர், அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(15712)


# இதயபூர்வமான நன்றிகள்

**1996ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதியிலிருந்து 2003 மார்ச் மாதம் 18ஆம் திகதிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராகவும், துணைவேந்தராகவும் பதவிவகித்த காலத்தில் எனது பணியைச் சிறப்புற நிறைவேற்றுவதற்கு எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பை நல்கிய பல்கலைக்கழக சமூகத்தினர், யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினர், யாழ்ப்பாணச் செயலகப் பதவியணியினர், கட்டடத் திணைக்களப் பதவியணியினர், இதர அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகள், பல்வேறு துறைகளையும் சேர்ந்த இந்நாட்டுப் பொது மக்கள் குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் ஆகியோருக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.**

**பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும், குறிப்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அமரர் பேராசிரியர் திலகரத்தினா அவர்கள் என்னை இப்பதவிக்குச் சிபார்சு செய்து இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் தனியான அக்கறை செலுத்தி அதன் தேவைகளை நிறைவேற்றியமைக்காகவும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.**

**எனது துணைவேந்தர் பதவிக்காலம் முடிவுற்றபோதும், முழுநேரப் பல்கலைக் கழகப் புவியியல் பேராசிரியராக எனது பணி தொடரும்.**

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**2003.03.17.** (15715)



உ
சிவமயம்

## நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு, இலங்கை

### அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையினர் அடியார்களின் உபயத்தோடு தினமும் நித்திய அன்னதானப் பணியினை வெகுசிறப்பாக நிறைவேற்றி வருவது நீங்கள் அனைவரும் நன்கறிந்ததே. ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள கல்யாணமண்டபத்தில் உயர் திருவிழா நாள்கள் (16 நாள்கள்) தவிர்ந்த ஏனைய நாள்களில் நித்திய அன்னதானப் பணியாக அம்பாளின் அமுத அன்னம் பரிமாறும் அருட் கொடைப் பணி நிகழ்ந்து வருகிறது.

இலங்கையின் பலபாகங்களிலிருந்தும், உலகின் நாலாபுறங்களிலிருந்தும் வெகு ஆவலோடும், நிரம்பிய பக்தியோடும், நயினை அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் இவ்வாலய அறங்காவலர் சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் நித்திய அன்னதான நிகழ்வில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். சர்வமதங்களுக்குமுரிய சந்நிதிகளைக் கொண்டு திகழும் நயினாதீவில் தேசியரீதியில் இன, மத, மொழி, நிற, பால் பேதமற்ற முறையில் நித்திய அன்னதானப் பணியில் அனைவரும் பங்கெடுத்துக்கொள்வது தனித்துவமானதொரு சிறப்பம்சமெனலாம்.

இந்த நித்திய அன்னதானப் பணியில் எவ்விதத்தொடர்பும் கொண்டிராத நிறுவனங்களும் ஆள்களும தாமே கோவில் நித்திய அன்னதானப் பணியினை செய்துவருவதாகக் கூறி, கோவில் அறங்காவலர்சபை செய்துவரும் ஆலயத்தின் நித்திய அன்னதானப் பணிக்கு ஊறுவிளைவிக்க முயல்கின்றனர். இன்னும் ஒரு சில பேர்வழிகள் "நயினாதீவு•ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில" என்றும் நயினை அம்பாளின் திருப்பெயரைப் பயன்படுத்திக் கோயிலின் நித்திய அன்னதானத்திற்கெனப் பெருந்தொகையான பணத்தினை உள்ளூரிலும் வெளியூரிலும் சேகரித்துவருவதாகவும் அடியார்கள் பலர் எமது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் பெயரால் நிதி சேகரிக்கும் நடைமுறை வழக்கில் இல்லை. எனினும், அம்பிகை அடியார்கள் தாமாகவே முன்வந்து இவ்வாலயத்துக்கு நிதியினை வழங்குவது அம்பாளின் திருவருட்கருணைச் சுரப்பே எனலாம். எந்தவொரு தனிநபருக்கோ, நிறுவனங்களுக்கோ, பணம்சேகரிக்கும் உரிமை அறங்காவலர் சபையினரால் வழங்கப்படவில்லை என்பதனை அம்பிகை அடியார்களுக்குப் பணிவுடன் அறியத்தருகின்றோம். அம்பாள் கோவிலுக்கு நேர்த்தி தொடர்பான நன்கொடையாகவோ, காணிக்கையாகவோ, திருப்பணிகளுக்கோ, நித்திய அன்னதானப்பணிக்கோ பணம் வழங்க விரும்பும் அடியார்கள் "பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்னும் முகவரிக்கோ அல்லது கொழும்பு புறக்கோட்டை 'பீப்பிள்ஸ் பாங்க்' வர்த்தக வங்கிக் கணக்கு இலக்கம் 01242628501 என்பதற்கோ அல்லது யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி கணக்கு இலக்கம் 1060012330 என்பதற்கோ காசோலையாகவோ, வரைவாகவோ, காசுக்கட்டளையாகவோ, நேரடியாகவோ வழங்க முடியும் என்பதனைப் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

*அறங்காவலர் சபை அலுவலகம்,*
*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,*
*நயினாதீவு.* கு.சரவணபவானந்தன் (ஜே.பி.)
*15.03.2003* கௌரவ செயலாளர்.

# ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 12 - 1945



உதிர்வு 19 - 03 - 2001

## திருமதி துரைராஜா தவமலர்

ஆயிரம் உறவுகள் அணைத்து நின்றிடினும்
அன்பான வார்த்தையில் ஆறுதல் கூறிடினும்
ஈராண்டு நிறைந்தும் மறையாது எமக்குள்ளே
இருக்கின்றீர் அம்மா இதயம் வெம்புகிறோம்!

*"தவமஹால்"*
*அல்வாய்* *(15677)* - குடும்பத்தினர்.




யாழ்ப்பாணத்தில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

"அன்னை நாகா புட் சிட்டி"

இன்று (19.03.2003) கோலாகலமாகத் திறந்துவைக்கப்படுகிறது!

175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. : (021) 2225515, (021) 2225223.

FLEX GRAPHIC

யாழ்ப்பாணத்தில் தரமான பொருட்களை வழங்குவதில் நாம் பெருமையடைகிறோம்.

Munchee Biscuits · Happy Cow · Keells · Elephant · லக்ஸ்பிறே

Nilkamal · Fa · SPERRYS Suppliers of Hotel & Supermarket Equipment · Turkey Brand · Janet Ayurveda · Johnson & Johnson

# நோர்வேயின் விசேட அழைப்பை ஏற்க மறுத்தார் ஜனாதிபதி சந்திரிகா

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நோர்வேக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அந்நாட்டு அரசாங்கம் விடுத்த விசேட அழைப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

அண்மையில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் ஜனாதிபதியை நேரில் சந்தித்தபோது இந்த அழைப்பை உத்தியோகபூர்வமாக விடுத்தார். நவம்பர் மாதமளவில் தமது நாட்டுககு விஜயம் செய்து நோபல் நிறுவனம் ஒழுங்கு செயதுள்ள கருத்தரங்கொன்றில் "சமாதான நடவடிக்கை" தொடர்பாக விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துமாறு அவர் ஜனாதிபதியை அழைத்தார்.

அழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி தற்போதைய சூழ்நிலையில் நோர்வே விஜயத்தை மேற கொள்ளமுடியாதிருப்பதாகவும் அதற்காகத் தான் வருந்துவதாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நிச்சயம தான் நோர்வேக்கு விஜயம் செய்வதாகவும் நோர்வே பிரதி அமைச்சரிடம் தெரிவித்தார் எனவும் ஹரீம் பீரிஸ் மேலும் சொன்னார்.

ஜனாதிபதியின் இந்த வருடத்திற்கான வெளிநாட்டுப் பயண அட்டவணைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## லஞ்ச விசாரணை ஆணைக்குழு வெற்றிடம்

# முன்னாள் நீதிபதி குணவர்த்தனவை நியமிப்பதை அரசமைப்புச்சபை நிராகரிப்பு

கொழும்பு,மார்ச்19

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு உறுப்பினா பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் தலைவரான உபாலி இலட குணவர்த்தனவை நியமிப்பதை அரசமைப்புச் சபை நிராகரித்துள்ளது.

அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட குணவர்த்தன தகுதியற்றவர் என்று குற்றஞ்சாட்டி பத்திரிகை ஆசிரியர்கள் மன்றம், சுதந்திர ஊடக அமைப்பு ஆகியவை உட்பட பல அமைப்புக்களிடமும் பொது மக்களிடமும் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அரசமைப்புச் சபை ஆராய்ந்து பார்த்தது.

சபையின் தலைவரான சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருப்பதால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசமைப்புச் சபை கடந்த வெள்ளிக்கிழமை கூடி குணவர்த்தனவின் நியமன சிபார்சை நிராகரித்திருக்கிறது.

ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரான முன்னாள் நீதியரசர் ரினன் அபேவீர காலமானதாலேயே இந்த வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது. (ஐ)


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அதிபர் திரு.அ.நடராசசுந்தரம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### க.அப்புக்குட்டி

அவர்கள் 16.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு நாம் மிகவும் வருந்துகின்றோம். கவலையுறும் அவரின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவர்களின் துயரிலும் பங்குகொள்ளுகின்றோம்.

யாழ்ழாலை மகாவித்தியாலயம். (15733) - பாடசாலைச் சமூகம்.





## 150 பேருக்கு ஆசிரிய நியமனங்கள்

கொழும்பு,மார்ச்19

மத்திய மாகாண தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க அடுத்த மாதம் 150 ஆசிரியர் கள் நியமிக்கப்படுவரென மத்திய மாகாண கல்வி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பத்தனை கல்விக் கல்லூரியில் பயிற்சியை முடித்துவிட்டு வேலை வாய்ப்புக்குக் காத்திருக்கும் 150 இளைஞர் யுவதிகளுக்கே ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

மத்திய மாகாண பாடசாலைகளில நீண்ட காலமாக ஆசிரியர் பற்றாக குறை நிலவிவருவது தெரிந்ததே.

## இரத்தினபுரி குண்டுவெடிப்பு 23 பேர் காயம்!

கொழும்பு,மார்ச்19

இரத்தினபுரி பகுதியில் நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்பொன்றில் ஆறு பொலீஸார் உட்பட 23 பேர் படுகாயமடைந்தனர். சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்ய பொலீஸார் சென்றபோதே இக்குண்டு வெடிப்பு நடைபெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் 16 பேர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும் ஏழு பேர் நிவித்திகல வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர். மேலும் சிலா சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

படுகாயமடைந்தவர்களில் சந்தேக நபரும் ஒருவராவார். (ஐ)

## பாலாவி மோதலில் காயமுற்ற வாலியர் மரணமானார்!

புத்தளம்,மார்ச்19

புத்தளம், பாலாவியில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற கோஷ்டி மோதலில் படுகாயமுற்ற மொஹமட் நிஜாம் (21 வயது) நேற்றுக்காலை ராகம வைத்தியசாலையில் காலமானார்.

நிஜாமின் மரணத்தை அடுத்து புத்தளம் நகரில் பதற்றம் நிலவுகின்றது. ராகம வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடைபெறாத காரணத்தால் சடலம் இன்னும் ராகம வைத்திய சாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ)

## ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள்

# சென். ஜோன்ஸ் அணி வெற்றி!

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 52 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்வாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

சென்ஜோன்ஸ் கல்லூரி 46.5 ஓவர்களில அனைத்து விக்கெட்டுக்களையும இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக அணித்தலைவர் சி.அகிலன் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களைப் பெற்றார்.

பி.லவேந்திரா, எஸ்.ரஜீவன் ஆகியோர் தலா 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்திய கல்லூரியின் பந்து வீச்சாளர்களில் அணித்தலைவர் வி.ரஜீவ்குமார் 4 விக்கெட்டுக்களையும், கே.கார்த்திக் 3 விக்கெட்டுக்களையும், கே.கலிஸ்ரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் களமிறங்கிய யாழ் மத்திய கல்லூரி அணி 34 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அவ்வணி சார்பாக ஆர்.சிவகுமார் அதிக பட்சமாக ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் பி.ஜசிந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்ஜோன்ஸ் கல்லூரி பந்து வீச்சாளர்களில் ரி.சி.அன்ட்ரு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பி.லவேந்திரா 3 விக்கெட்டுக்களையும்,எஸ்.அகிலன் 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

இவ்வாட்டத்தின் சிறப்பாட்டக்கா ரராக 4 விக்கெட்டுக்களை கைப்பற்றிய ரி.சி. அன்ட்ரு தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-5)

# யாழ்ப்பாணக் கல்லூரி தோல்வி

யாழ்ப்பாணம்,மார்ச்19

சென்பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் தொடரின 15 ஆவது வருடாந்த ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 144 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நேற்று சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இவ்வாட்டம் நடைபெற்றது. 50 ஓவர்கள் கொண்டதாக இப்போட்டி நிர்ணயிக்கப்பட்டபோதும் மழை காரணமாக 41 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 41 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மட்டும இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக எஸ்.அருண்நாத் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களைப் பெற்றார். ஜி.எஸ்.லொயிட் 72 ஓட்டங்களையும், ஆர்.விநோதன் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களில் எஸ்.தனகரன் இரு விக்கெட்டுக்களையும், கே.உதயகுமார், எம்.திலீபன், எஸ்.ராஜ்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 28.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அவ்வணி சார்பாக வி.நிருபரன் 23 ஓட்டங்களையும், எம்.திலீபன் 18 ஓட்டங்களையும், எஸ்.ராஜ்குமார் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பந்துவீச்சாளர்களில் எம்.கிறிஷாந்தன் 5 விக்கெட்டுக்களையும், செல்வின் லொயிட், எஸ்.அருண்நாத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இவ்வாட்டத்தின் சிறப்பாட்டக்காரராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் செலவின் லொயிட் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த பந்துவீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சி.ஆர்.எம்.கிறிஷாந்தும், சிறந்த துடுப்பாளராக அதே கல்லூரியைச் சேர்ந்த அருண்நாத்தும், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எம்.அகிலநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சகலதுறை ஆட்டக்காரராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் எஸ்.அருண்நாத் தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-5)

# புத்தளத்தில் அரசியல்வாதியின் இல்லத்தில் இராணுவச் சீருடை!

புத்தளத்தில் அரசியல்வாதி ஒருவரின் இல்லத்திலிருந்து இராணுவசீருடை, வெற்று மெகஸின்கள் இரண்டு என்பன புத்தளம் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன.

கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் ஒரு வாலிபர் வெட்டிக் காயப்படுத்தப்பட்ட சம்பவம் குறித்து நடத்திய விசாரணையின்போது கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் பொலீஸார் அந்த அரசியல்வாதியின் வீட்டைச் சோதனையிட்டுள்ளனர். அப்பொழுதே இராணுவச் சீருடையும் வெற்று மெகஸின்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

வாலிபர் வெட்டிக் காயப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட அரசியல்வாதியைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துவருவதாக புத்தளம் பொலீஸார் தெரிவித்திருககின்றனர். (ம)

# தொண்டர் ஆசிரியர் நியமனம்: புதிய பரீட்சை நடைமுறை அறிமுகம்

## இரு வாரங்களில் விண்ணப்பம் வெளியாகும்

சாய்ந்தமருது,மார்ச்19

தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் பெறுவதற்கு பரீட்சைக்குத் தோற்றுவதுடன் நேர்முகப் பரீட்சையையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என பாடசாலைக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.சிறிசேன தெரிவித்தார்.

இதுதொடர்பான விண்ணப்பம் இன்னும் இரண்டு வார காலத்திற்குள் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட இருப்பதாகவும் அவர் சொன்னார்.

ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேற்றுடன் 1998ஆம் ஆண்டு வரை தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றியவர்கள் நிரந்தர ஆசிரிய நியமனத்திற்கு விண்ணப்பிக்கமுடியும்.

பரீட்சைப் புள்ளிகளுக்கு மேலதிகமாக ஒருவருட தொண்டர் ஆசிரியா சேவைக்கு 2 புள்ளிகள் விதம் வழங்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஒ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 - 10 - 1955 | 29 - 03 - 2002 |

அமரர் சரவணமுத்து குணரத்தினம் (குணம்)
(திதி:19.03.2003)
என்றும் உங்கள் நினைவுடன்....

29/2, கடைச்சுவாமி லேன்,
நீராவியடி. (15732) - குடும்பத்தினர்.



யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பாராட்டு விழாவில் மூத்த பத்திரிகையாளர் செ.கதிர்காமத்தம்பிக்கும், சமூக சேவையாளர் இ.நிமலன் கார்த்திகேயனுக்கும் முறையே யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள் : ரமணன்)

# சட்டத்தரணி கைது விடயம் மனித உரிமை மீறலாகும்.

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

நுகேகொடையைச் சேர்ந்த சட்டத்தரணி திலக் அர்ஜுன சேரசிங்க பொலஸாரினால் கைதுசெய்யப்பட்டமை அடிப்படை மனித உரிமை மீறல் என்று உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

பொ.ஐ.மு. ஆட்சிக்காலத்தில் எதிர் கட்சியான ஐ.தே.க. ஏற்பாடு செய்த மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது சட்டத்தரணி சேரசிங்க கைதுசெய்யப்பட்டிருந்தார்.

வாதியான சட்டத்தரணிக்கு நஷ்டஈட்டுத் தொகையாக 20ஆயிரம் ரூபா செலுத்தப்படவேண்டுமென பிரதிவாதியான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் காமினி கருணாதிலக்கவுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது. வழக்குச் செலவாக 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

நீதியரசர்களான மார்க் பெர்னான்டோ, அமிர் இஸ்மாயில், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இந்த வழக்கை விசாரணை செய்தனர்.

சம்பவம் நடைபெற்ற பொழுது நுகேகொடை பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகராக பிரதிவாதி கருணாதிலக கடமையாற்றினார்.(ம)

# சமூக நீதியைக் காக்கும் அரண்களாக ஊடகவியலாளர் திகழ்ந்திட வேண்டும்!

## பாராட்டு விழாவில் சி.வி.கே. சிவஞானம் உரை

யாழ்ப்பாணம்,மார்ச்19

ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் சமூக நீதியைக் காக்கும் அரண்களாகத் திகழவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம்

மூத்த பத்திரிகையாளர் செ.கதிர்காமத்தம்பி, சமூக சேவையாளர் நிமலன் கார்த்திகேயன் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். மததிய கல்லூரி தம்பர் மண்டபத்தல் இடம்பெற்ற இப்பாராட்டு விழாவில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களும் ஒன்றிணைந்து சமூகத்தின் ஒருமித்த குரலாக ஒலிக்கவேண்டும் பத்திரிகையாளர் ஏணி போன்றவர்கள். அவர்கள் தமது செய்திகளினால் எத்தனையோ பேரின் உயர்வுக்குக் காரணமாக இருந்துள்ளனர். அதே போன்று கடந்த 95ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஊடகவியலாளர்கள் சந்தித்த அச்சுறுத்தல்கள், அவலங்கள், துன்பதுயரங்கள் ஏராளம். ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தப்பட்டனர். இவ்வாறான நிலையிலும் பத்திரிகைத் துறையில் தொடர்ந்து பணியாற்றி வருகின்ற கதிர்காமத்தம்பி போன்றோரின் பணி பாராட்டத்தக்கது. இந்த மண்ணினதும் மக்களினதும் தரம் குறைவதற்கு ஊடகவியலாளர்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. தொடர்ந்தும் இந்த மண்ணின் பெருமையைப் பேணுங்கள் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஊடகங்கள் சமூகத்தின் முதுகெலும்பு போன்றவை. அவை சமூகத்தின் கருத்துக்களைப் பிரதிபலிப்பனவாக இருக்கவேண்டும். அதேவேளையில் பத்திரிகைகள் செய்திகளை எழுதும்போது அவற்றின் நம்பகத்தன்மை பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும். தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் ஊடகவியலாளர்களுக்கு வசதி, வாய்ப்புகள் அதிகம். அதுபோன்ற வசதிகள் இங்கும் ஏற்படுத்தப்படவேண்டும் - என்றார்.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற தமிழ்மக்களுக்கு எதிரான கொடுமைகள், வன்முறைகள், படுகொலைகள். மற்றும் அழிவுகள் ஆகியன பற்றியும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் வெளி உலகத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதில் இங்குள்ள பத்திரிகையாளர்கள் துணிவுடன் செயற்பட்டு வந்ததை நாம் மறந்துவிடமுடியாது. செம்மணியில் இடம்பெற்ற மனிதப்படுகொலைகள் பற்றியும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர்கள் இப்பத்திரிகையாளர்களேயாவர். இன்று தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் சில ஆங்கில தினசரிகளும் சிங்கள மொழி ஊடகங்களும் சமாதானத்தை குழப்பி மீண்டும் இந்நாட்டில் இரத்தக்களரியை உருவாக்கும் வகையில் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. சமாதானத்தை நிலைநாட்டும் பணியில் பத்திரிகையாளருக்கும் பெரும் பொறுப்பு உள்ளது - என்றார்.

இப்பாராட்டு விழாவில்

மூத்த பத்திரிகையாளர் செ.கதிர்காமத்தம்பிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயமூர்த்தியும் நிமலன் கார்த்திகேயனுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் 'பத்திரிகையாளன்' எனும் நூல் வெளியீடும் இடம்பெற்றது இந்நூலின் அறிமுகவுரையை 'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலமும் வெளியீட்டுரையை கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்தினார்கள்.

(ஒ-9-10-135)

### மோதல் தீர்ந்து அமைதி நிலவினாலும்

# தொழிலுக்குச் சென்ற கற்பிட்டி மீனவர் திருப்பி அனுப்பப்பட்டனர்

கற்பிட்டி,மார்ச்19

கற்பிட்டி பிரதேச மீனவர்களுக்கும நீர்கொழும்பு பிரதேச மீனவர்களுக்குமிடையிலான மோதல் தீர்ந்து கற்பிட்டி பிரதேச கடல் பகுதியில் ஞாயிறுமுதல் அமைதி நிலவுகின்றது.

ஆயினும், நேற்றுமுன்தினம் கற்பிட்டி, வன்னிமுந்தல் பகுதியில் இருந்து சாலை வலைத் தொழிலுக்குச் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

பத்தளங்குண்டு பகுதியிலுள்ள நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர்களே அவர்களைத் திருப்பியனுப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சனிக்கிழமை இரு தரப்புக்குமிடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட சமரசப் பேச்சுக்களையடுத்து கற்பிட்டி 'லைலா' வலைத் தொழிலாளர் கடற்படையினரின் பாதுகாப்போடு தொழிலில் ஈடுபடலாமென தெரிவிக்கப்பட்டது.

சமரசப் பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானங்கள் பத்தளங்குண்டு தீவுப் பகுதி மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அவற்றுக்கு உடன்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கற்பிட்டி மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினையை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்து ஒருசில தினங்களில் தீர்வைப் பெற்றுத் தருவதாக சமரசப் பேச்சுக்களின்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

# முதலாம் காலாண்டுக்கு தேவையான மருந்துகள் எடுத்துவரப்படவில்லை

சண்டிலிப்பாய்,மார்ச்19

யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள மத்திய மருந்து விநியோக களஞ்சியத்தினால் இவ்வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை. இதன் காரணமாக யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் பலவற்றில் மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

மருந்து வகைகள் மிகவும் பற்றாக்குறை நிலவும் அரச வைத்திய சாலைக்கும் மற்றும் அரச மத்திய மருந்தகங்களுக்கும் கடந்த வருடத்தில் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுத் தற்போது கையிருப்பில் இருக்கும் மருந்துகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மருத்துவ மனைகளும், அரச மருந்தகங்களும் அத்தியவசிய மருந்துத் தேவைகளுக்கு சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்துடன் தொடர்பு கொண்டு மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்.சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகன வசதியில்லாத காரணத்தினாலேயே இந்த மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு நேரடியாக கொண்டுசென்று விநியோகம் செய்ய முடியாதுள்ளதாகவும் -

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்று சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகள் தமக்குத் தேவையான கையிருப்பிலுள்ள மருந்து வகைகளை நேரில்வந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

## சந்திப்பு

கிளிநொச்சி,மார்ச்19

சமூக அபிவிருத்தி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியில் தலைவருமான பெ.சந்திரசேகரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார். புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் மீண்டும் ஒரு யுத்தத்துக்கு வழியமைத்துவிடக்கூடாது என்பதை இச்சந்திப்பில் சந்திரசேகரன் வலியுறுத்தினார்.

எந்தநிலையிலும் சமாதானப் பேச்சுகள் முறிவடையக்கூடாது என்ற மலையக மக்கள் முன்னணியின் கருத்தை தமிழ்ச்செல்வன் ஏற்றுக் கொண்டார். (ம)

# அனலைதீவு - ஊர்காவற்றுறை படகுசேவையில் புதிய ஒழுங்கு

ஊர்காவற்றுறை,மார்ச்19

அனலைதீவிற்கும் - ஊர்காவற்றுறைக்குமிடையிலான படகுச் சேவைகள் தற்பொழுது அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான புதிய நேர ஒழுங்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனலைதீவில் இருந்து முன்னர் இரண்டு படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வந்தன. தற்பொழுது இவற்றுடன் மேலும் ஒரு படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த புதியநேர ஒழுங்கின் பிரகாரம் அனலைதீவில் இருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் படகு எழுவைதீவு ஊடாக ஊர்காவற்றுறை சென்றடையும் அதேவேளை, அனலைதீவில் இருந்து காலை 8.30 மணிக்கும் 9.30மணிக்கும் புறப்படும் படகுகள் நேரே ஊர்காவற்றுறையை வந்தடைகின்றன.

இவை பின்னர் முறையே பிற்பகல் 1.30, 2.45, 4.30 ஆகிய நேரங்களில் ஊர்காவற்றுறையிலிருந்து அனலைதீவு நோக்கிப் புறப்படுகின்றன.

அதேவேளை, யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து நண்பகல் 12மணிக்குப் புறப்பட்டு 780இலக்க பாதையூடாக பயணம் செய்யும் பஸ் ஊர்காவற்றுறை வந்தடைந்து பின்னர் அங்கிருந்து கண்ணகை அம்மன் இறங்குதுறையை சென்றடையும். இதன்மூலம் பயணிகள் பிற்பகல் 1.30 மணிக்கு புறப்பட்டு படகில் பயணம் செய்யக்கூடியதாகவிருக்கும்.

இதேவேளை - ஊர்காவற்றுறையில் இருந்து தினமும் தீவுப் பகுதிகளுக்கு சேவையில் ஈடுபட்டு தற்சமயம் பழுதடைந்துள்ள தேவாரதம் படகிற்கு பதிலாக மாற்றுப் படகு ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இப்படகு நயினாதீவு தவிர்ந்த அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையில் இருந்து தினமும் காலை 9.30மணிக்கு புறப்படும் இப்படகு எழுவைதீவு ஊடாக அனலைதீவு சென்றடையும். பின்னர் அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்கு புறப்பட்டு ஊர்காவற்றுறையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-16)

# சமாதானப் புறா ஆவோம்!

### தவக்காலச் சிந்தனை -15ஆம் நாள்-

"சட்டத்திற்காக மனிதனல்ல மனிதனுக்காகவே சட்டம்" உளமாற்றத்தின் உயிர்ப்புப் பெறும் காலந்தான் இத்தவக்காலம். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்ட பொற்காலம் இது என்று கூறினால் அது மிகையாகாது. இன்றைய நாள் நற்சிந்தனையாவது யோவானின் சீடர் 'ஏன் உமது சீடர் நோன்பிருப்பதில்லை?' என இயேசுவை வினவியபோது, இயேசு 'மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர் துக்கம் கொண்டாட முடியுமா? எனப் பதில் அளிக்கின்றார். இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது, கடவுள் எம்மோடு பிரசன்னமாக இருக்கையில் நாம் எவருக்கும் அஞ்சத்தேவையில்லை. நாம் தீய நாட்டங்களால் கடவுளை விட்டு எப்போது பிரிகின்றோமோ அப்போது எல்லாவற்றையுமே இழந்து நிற்கின்றோம்.

மேலும், எம் சிந்தனைக்குத் தரப்பட்ட இன்னொரு கருத்தொன்று, தவக்காலம் பற்றியது. தவக்காலம் என்றவுடன் இந்த நாற்பது நாள்களும் நோன்பிருக்கவேண்டுமே என எண்ணுகின்றனர். வேறு சிலர் எல்லோரும் நோன்பிருக்க நான் எப்படி நோன்பிருக்காமல் இருப்பது என்று அங்கலாய்க்கின்றனர்- இயேசுவின் காலத்தில் பல தடவைகளில் பரிசேயரின் வெளிவேடத்தனமான போலி வாழ்வைக் கண்டித்து நிற்பதைக் காண்கிறோம். இத்தகைய வெளிவேடங்கள் எம் கிறிஸ்தவ வாழ்வைப் பாழாக்கி விடுகின்றன. நண்பனே, அன்பனே உனக்கு இறைவன் அளித்துள்ள பொன்னான காலத்தை மண்ணாக்காதே. - கிறிஸ்து யேசுவை உன் இதயத்தில் அப்படியே தங்கவைக்க இதோ சில நற்செயற்பாடுகள் உனக்கு முன்பாகத் தரப்பட்டுள்ளன. கல்லான இதயத்தில் நீ கொண்டிருக்கும் அகந்தைகள் உன்னைவிட்டு பறந்தோடட்டும். உறவே வேண்டாம், எனக்குள்ள பணமே போதும் என்ற தற்பெருமை உன்னை விட்டு அழியட்டும். பொறுப்புக்களை உதறித் தள்ளி குடும்பத்திலும் சமுதாயத்திலும், நான் பணிபுரியும் இடங்களிலும் ஏனோ தானோ என்று வாழ்க்கை நடத்தும் பொறுப்பற்ற தன்மை என்னை விட்டகலட்டும். பெற்று வளர்த்தவரை உதாசீனம் செய்து வெறுப்பும் அருவருப்பும் பொங்கிய பார்வையுடன் உற்று நோக்கி வாழும் தன்மை என்னை விட்டுப் பறந்தோடட்டும். இவைதாம உண்மையான நோன்பு. மெய்யான தபம் - இறைவாக்கினர் இசையாஸ் கூறுகின்றார்."உங்கள் உடைகளையல்ல உள்ளங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்." இதுவே மேலான நோன்பு.

மனித மாண்பினை மதித்து பகையை மறந்து அன்பு, மன்னிப்பு, தியாகம் போன்ற நோன்புகளை கடைப்பிடித்து இறைவாழ்வில் மகிழ்ச்சியாக வாழ்ந்து சமாதானப் புறாக்களாக இத்தவக்காலத்தில் மிளிர முயற்சிப்போமாக!

தவம் குருசுமுத்து

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு இராசதுரை

**(முன்னாள் அதிபர்)**

யாழ்ப்பாணம், நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு இராசதுரை அவர்கள் 15.03.2003 சனிக்கிழமை இரவு லண்டனில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை கந்தப்பு - தெய்வயானையின் புதல்வரும் பூரணம் அவர்களின் அன்புக்கணவரும் அன்பானந்தர் (வாணி ஏஜென்சி, லண்டன்), சிவசக்தி, சிவானந்தவல்லி (ஆனந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதினி (வாணி ஏஜென்சி) சிவராஜசிங்கம், ராகுல பாஸ்கரன் அவர்களின் மாமனாரும் அமுதவாணி, அகிலன், மரியா, சோபன், துர்க்கா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.03.2003) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு City of London Manorpark மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு:
வாணி ஏஜென்சி
தொ.பே.: 0208 - 4718366
வீடு: 0208-5521273
விலாசம்: 39, Essex Road, Manor Park, London EIR.

தகவல்:
க.குமாரசுவாமி
வெள்ளவத்தை.
(சி-37009)

## திருமதி குமாரசாமி செல்லம்மா

**(குரும்பசிட்டி)**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது தெல்லிப்பழை துர்க்கா புரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி செல்லம்மா அவர்கள் நேற்று (18.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வடிவேலு - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் குமாரசாமியின் அன்பு மனைவியும் தனலட்சுமி (ஆசிரியை, வீமன்காமம் ம.ம.வி.), கிருஷ்ணகுமாரி (இந்தியா), வளர்மதி (ஆசிரியை, உடுவில் முருகமூர்த்தி ம.ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும் ந.காளிதாசன் (ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி), த.அரியரத்தினம் (இந்தியா), ந.மகாலிங்கம் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வ.செல்வநாயகம் மற்றும் திருமதி கனகேந்திரம் சொறுணம்மா (டென்மார்க்), T.V.கிருஷ்ணசாமி (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்), வ.சிவப்பிரகாசம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கா.தேவகாந்தன் (கல்வியியற் கல்லூரி, வவுனியா), அ.தமயந்தி (கனடா), அ.கர்ணன் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.03.2003) புதன்கிழமை பி.ப.1மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.*
(15729)

தகவல்:
T.V.கிருஷ்ணசாமி
(சகோதரன்).

## தென்மராட்சியில் மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகள்

தென்மராட்சி,மார்ச்19

தென்மராட்சிப் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப்போட்டிகள் இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் விண்ணப்பங்களை சுய மாகத் தயாரித்து தத்தமது பகுதி கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தி எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருடத்திற்கான பிரதேச விளையாட்டு விழா சம்பந்தமான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை காலை 10.00மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறுமென வும், பிரதேசத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறும் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-117)

## தொண்டர் ஆசிரியருக்கு

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ஆரியகுளம் அருகே உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் - இதில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறும் - யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## தீவக வலய அதிபர்களுக்கு

மண்டைதீவு,மார்ச்19

தீவக வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10.00மணிக்கு தீவக வலயக் காரியாலயத்தில் இடம் பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல அதிபர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார். (ஒ-88)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி விக்கினேஸ்வரன்

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் அவர்கள் 17.03.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி லட்சுமியின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மகேஸ்வரியின் மருமகனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, ராசம் ஆகியோரின் சகோதரரும் சரவணமுத்து, சோதிலிங்கம், சரஸ்வதி, கனகாம்பிகை, பாலசுப்பிரமணியம், சிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனரும் நடராசா, பாலசுப்பிரமணியம், சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும் பாலகௌரியின் சித்தப்பாவும் ராதாவின் மாமனாரும் இந்துஜா, வசீகரன், வர்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2003) புதன்கிழமை காலை 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(15731)

தகவல்: வி.சிவயோகம்
(மனைவி).

## இராமலிங்கம் சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற ரிக்கெற் பரிசோதகர், புகையிரதத் திணைக்களம்)

உரும்பிராய், தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவலிங்கம் 11-03-2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - குட்டிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற கந்தையா (யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்) வின் அன்புச் சகோதரரும் நாயன்மார்கட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகெங்கையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஈஸ்வரியின் மைத்துனரும் சிவபாலன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (லண்டன்), சிவஜெயந்தா, சிவஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-03-2003 சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*காளிகோயிலடி,*
*பலாலி வீதி, உரும்பிராய்.*
T.P No. 021 222 5339
(15730)

தகவல்:
திரு.திருமதி சந்திரபாலன்
சந்திரன் ராசாத்தி

## வேலாயுதம் வீரகத்தி

வரணி, மாசேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் வீரகத்தி அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் வேலாயுதம்பிள்ளை(பிரான்ஸ்), கதிர்காமநாதன் (M.O.H.Office, பருத்தித்துறை), கிருஷ்ணகுமார்(லண்டன்), திலீப்குமார்(லண்டன்), தயாரூபன், நிமலநாதன்(லண்டன்), விநோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்தவம், இராஜேஸ்வரி (ஆசிரியர், யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை), அருட்செல்விசுகிர்தா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாசேரி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாசேரி,*
*வரணி.*
(15728)

தகவல்:
வீ.கதிர்காமநாதன் (மகன்)



# காரைநகர் களபூமி கிளுவனை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண பஞ்சகுண்டபக்ச மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 19.03.2003

## அமைச்சரின் வாழ்த்து



சப்த தீவுகளில் ஒன்றான காரைநகரில் உள்ள நான்கு கண்ணகை அம்மன் ஆலயங்களில் புராதன வரலாற்றுப் பெருமை மிக்கது களபூமி கிளுவனையில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் கோயிலாகும்.

அநநியர் ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேயர் சைவ ஆலயங்களை இடித்து தரைமட்டமாக்கியபோது மேரி மாதா கோவில் என எண்ணிய போர்த்துக்கேயரிடம் இருந்து தப்பிய இவ்வாலயம் அதே பொழிவுடன் இன்றும் காணப்படுகின்றது.

இன்று இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு நாட்டில் மழையின்றி வர்க்கடம் ஏற்படும் காலத்தில் அடியவர்கள் பொங்கல் குளிர்த்தி செய்து வர்ண பகவானை வழிபடும் போது வர்ண பகவான் மழை சுரப்பதற்கு அருள்பாலிக்கும் அம்பாள் திருவடிகளை பிரார்த்தித்து மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வாழ்த்தி அமைகின்றேன்.

**தி.மகேஸ்வரன்,** இந்து கலாசார அமைச்சர்.

## பிரதிஷ்டா குருவின் ஆசி




சைவமும் தமிழும் இந்து தர்மமும் செழித்து விளங்கும் காரைநகரிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் களபூமி கிளுவனை ஸ்ரீகண்ணகை அம்பிகையினுடைய பெருஞ்சாந்தி பெரு விழாவான மஹாகும்பாபிஷேகம் இன்று மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

ஈழத்தில் கண்ணகை வழிபாட்டை மேம்படுத்த எண்ணிய கஜபாகு மன்னன் கந்தரோடையில் உள்ள அங்கணாக் கடவை எனும் இடத்தில் கண்ணகைக்கு ஒரு சோகிலை அமைத்தான் எனக் கூறப்படுகின்றது. அதன் காரணமாக கண்ணகைக்கு வட பகுதியில் பல கோயில்கள் உருவாகின. அதில் ஒன்றே களபூமியில் அமைந்திருக்கும் இக் கண்ணகை அம்மன் கோயிலாகும்.

இந்த கண்ணகை அம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதுடன் இக்கிராமத்தில் வாழ்கின்ற சகல அடியார்களும் மிகச் சிறந்த சுதந்திரமான வாழ்வு பெறப் பிரார்த்தித்து எல்லோருக்கும் மனமுவந்த ஆசிகளை எம்பிராட்டி சார்பாகக் கூறி அமைகின்றேன்.

பிரதிஷ்டா பிரதமகுரு: **சிவஸ்ரீ ச.சி.பாலசண்முகக்குருக்கள்** கும்பாபிஷேக பிரதமகுரு.

## திருப்பணிச் சபைத் தலைவரின் செய்தி




இன்று மகா கும்பாபிஷேகம் காண்கின்ற காரைநகர் கிளுவனை கண்ணகை அம்மன் கோவில் திருப்பணிச் சபை அமைந்த வரலாறு அற்புதமானது. அம்பாளின் அசரீரியின் பிரகாரமே திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டு, ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டன. இத்திருப்பணி வேலைகள் நிறைவுபெற பொருள் உதவி, பண உதவி, சரீர உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது பணிவான நன்றிகள்.

இன்றைய மஹாகும்பாபிஷேக நன்னாளில் அடியார்கள் அனைவரும் கண்ணகை அம்பாளின் கும்பாபிஷேக நிகழ்வுகளை கண்டுகளித்து அனைத்து செல்வங்களையும் பெற்று உய்ய வேண்டி கண்ணகை அம்பாளின் பாதார விந்தங்களை பணிந்து வணங்குகின்றேன்.

**ஆ.இரத்தினராசா,** ஆலய திருப்பணிச்சபைத் தலைவர்.

## ஆலய குருவின் ஆசி



சிவவழிபாட்டிலும் அம்பிகை வழிபாட்டிலும் சிறப்புப்பெற்ற இடம் காரைநகர் ஆகும். இதற்குச் சான்று தருவனவாக அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களை இங்கு காணலாம். இவற்றுள் பழமையும் அற்புதமும் கொண்ட ஓர் ஆலயமாக விளங்குவது களபூமி கிளுவனைப் பதி கண்ணகை (மாதாங்கோயில்) அம்மன் ஆலயம் ஆகும். இவ் ஆலயம் பழைய காலத்தில் அதாவது போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டது. அந்தக் காலத்தில் மாதாங் கோயில் என்று மக்களால் அழைக்கப்பட்டது. இங்கு வந்து வழிபாடு செய்கின்ற அம்பாள் அடியார்களை வாழ்த்துகின்றேன். அவர்களில் பலர் அபிராமி அந்தாதியை முழுவதும் மனனமாகப் பாடுகின்ற பயிற்சியையும் நான் நேரிற்கண்டு வியந்துள்ளேன். இத்தகைய அருள் வாய்ப்புப் அன்பர்கள் வழியினால் இன்று ஆலயத் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு விழாவையும் இன்று காணுகின்ற வாய்ப்பையும் பெற்றுள்ளனர். இத்திருப்பணியில் ஈடுபட்ட திருப்பணி சபையினருக்கும் அடியார்களுக்கும் பதினாறு பேறும் கிடைக்கவேண்டுமென எம் பெருமாட்டியின் பாதார விந்தங்களைப் பிரார்த்தித்து ஆசிகூறுவதில் பெருமையடைகின்றேன்.

இங்ஙனம்: சிவஸ்ரீ கு.சுந்தரராஜக் குருக்கள் (ஆலயப் பிரதம குரு)


கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்:

ஆறுமுகம் ரேக்ஸ்ரைல்ஸ்
இல. 210, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கிருஸ்ணா ரேட் சென்ரர்
(பல்பொருள் வாணிபம்)
இல. 714, K.K.S. வீதி,
சுட்டாப்பிருச் சந்தி, யாழ்ப்பாணம்.

பாலகணேசன் களஞ்சியம்
இல. 125, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கமல் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: சு.தம்பிராசா
பழைய கண்டி, காரைநகர்.

ராஜா ஸ்ரோர்
மாதாங்கோவிலடி,
களபூமி, காரைநகர்.

குமார் களஞ்சியம்
பழைய கண்டி, காரைநகர்.

க.கு.கந்தையாபிள்ளை அன் சன்
இல. 31/2A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா குறோசறீஸ்
இல. 154, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

ரூபா பன்முக வர்த்தக நிலையம்
இல.104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-37008)

# கலங்கடித்தார்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

4ஆவது விக்கெட்டுக்கு சைமன்ஸும் லீமனும் இணைந்தனர். 20ஆவது ஓவரில் அணியின் எண்ணிக்கை 82. அப்போது, உலகின் முதல் தரமான சுழல் பந்துவீச்சாளரை அழைத்தார் ஜெயசூரிய. ஆனால், விக்கெட்டுக்கள் ஏதும் விழவில்லை. 25ஆவது ஓவரில் 102 ஓட்டங்கள். சைமன்ஸ் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அரவிந்தவின பந்தில் கிடைத்த மிக அருமையான 'ஸ்டொம்' சந்தர்ப்பம் ஒன்றை தவற விட்டார் சங்ககார. அவரது அந்தத் தப்பு அணியின் சரிவுக்கு வழிவகுத்தது. அப்போது எண்ணிக்கை 111. 69 பந்துகளில் அரைச்சதம் பெற்றார் சைமன்ஸ். மறுமுனையில் 66 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த லீமன், ஜெயசூரியவின் பந்தில் 'போல்ட்' ஆனார். இடதுகை ஆட்டக்காரரான அவர், ஜெயசூரியவின் 'லெக் பிரேக்' பந்தை முன்காலில் சென்று ஆடமுற்பட்டார். பந்து மட்டையின் உள்விளிம்பில் பட்டுத் திரும்பி இடது இலக்கைத் தாக்கித் தகர்த்தது. அவரும் சைமன்ஸும் இணைந்து குவித்தது 93 ஓட்டங்கள். புதிதாக வந்தவர் பெவன். 35ஆவது ஓவரில் 144 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் இழப்பு.

ஜெயசூரியவின் பந்துவீச்சில் தன் முதல் பந்தை எதிர்கொண்ட பெவன் பின்னால் சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மட்டையை லேசாக உரசிச் சென்றது பந்து. 5ஆவது விக்கெட் வீழ்ச்சி. வந்தவர் ஹொக். 40 ஓவர்களில் 155 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பு. மீண்டும் தாக்குதலுக்கு அழைக்கப்பட்ட அரவிந்தவின் பந்தை முன்னேறித் தட்டமுயன்ற ஹொக், அபாரமாக சங்ககாரவால் 'ஸ்டொம்' செய்யப்பட்டார். 41ஆவது ஓவர்முடிவில் 160 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் இழப்பு. இயன் ஹார்வி, வாஸின் பந்தை முன்னே சென்று ஆடமுற்பட்டு பின்னால் இலகுவான பிடி ஒன்றைக் கொடுத்து ஆட்டமிழந்தார். 49ஆவது ஓவரில் குணரத்ன கொடுத்த 19 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலியா 200 ஓட்டங்களைத் தாண்டியது. இறுதியில் 50 ஓவர்கள் முடிவில், 7விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்கள் பெற்றது ஆஸ்திரேலியா. அதில் ஆட்டமிழக்காமல் 118 பந்துகளில் சைமன்ஸ் பெற்ற 91 ஓட்டங்கள் அடக்கம். 7 'பௌண்டரி'கள், ஒரு சிக்ஸரை விளாசினார் அவர். ஏற்கனவே 20 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்த சமிந்தவாஸ், இந்த ஆட்டத்தில் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி, முதல் மூன்று ஓவர்கள் மிக அழகாக ஆடியது. இந்தப் போக்கில் போனால் விரைவில் வென்று விடுவார்களோ என்று எண்ணிய சமயத்தில், பிரட் லீ இலங்கைத் மேல் வரிசை துடுப்பாளர்களை கலங்கடித்து கதறவைத்தார். 161 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய 'ஜோக்கர்' பந்து ஒன்றில் அத்தபத்துவின் விக்கெட் தகர்ந்து பறந்தது. 5 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட் இழப்பு பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்கள் மழமழவென வீழ்ந்தன. 6ஆவது ஓவரில் லீயின் பந்தில் ஜெயசூரிய ஒரு சிக்ஸ் விளாசினார். 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மெக்ராத்தின் பந்தை திருப்பி அடிக்க முற்பட்டு 'லெக் கலி' திசையில் நின்ற சைமன்ஸிடம் பிடிகொடுத்தார். 37 ஓட்டங்களுக்கு 2ஆவது விக்கெட்டை இழந்தது இலங்கை. நன்றாக வெளியே சென்ற லீயின் பந்தை ஆசையால் எட்டி அடிக்க முயன்ற திலகரத்ன தற்கொலை செய்துகொண்டார். மட்டை விளிம்பில்பட்டு எகிறிய பந்து கில்கிறிஸ்டிடம் சரணடைந்தது. 10 ஓவர்களில் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் வீழ்ச்சி. மீண்டும் லீயின் வெளியே சென்ற பந்தை செலுத்தி ஆடமுற்பட்ட குணவர்த்தன பொன்டிங்கிடம் பிடிகொடுத்து வந்தவேகத்தில் 'பெவிலியன்' திரும்பினார். 12ஆவது ஓவரில் 45 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் இழப்பு.

அன்ரூ பிச்சலின் அபாரமான, மிக அருமையான களத்தடுப்பால் திருப்பப்பட்டார் அரவிந்த டி சில்வா. பிக்சல் வீசிய பந்தைத் தட்டிவிட்டு ஓட முயன்றார் சங்ககார. முன்னே ஓடி வந்த பிக்சல் பந்தை எடுத்து சடுதியாகத் திரும்பி கில்கிறிஸ்ட் திசை நோக்கி எறிந்தார். பந்து நேராக இலக்கைத் தாக்கியது. அரவிந்த 'ரன் அவுட்'. 14 ஆவது ஓவரில் 52 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பு. தொடர்ந்து வந்த ஜெயவர்த்தன வழமை போன்று 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆர்னோல்டும் 3 ஓட்டங்களுடன் 'பெவிலியன்' திருப்பப்பட்டார். 76 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் இழப்பு. 100 ஓட்டங்களுக்குள் இலங்கையின் கதை முடிந்துவிடும் என்று எண்ணுகையில் ஆபத்பாந்தவர்களாக நாம் இருக்கின்றோம் என்பதாக ஆடினர் சங்ககாரவும் வாஸும். ஆனால், அது மழைக்குப் பொறுக்கவில்லை. 38.1 ஓவரில் மழை வந்து குழப்பியது. பின்னர் ஆட்டம் தொடரவே இல்லை. அந்த நிலையில் இலங்கை பெற்றிருந்தது 123 ஓட்டங்கள். வெற்றி பெற வேண்டுமாயின் அது 173 ஓட்டங்களைப் பெற்றிருந்திருக்க வேண்டும். பின்னர் 'டக்வோர்த் லூயிஸ்' முறைப்படி 48 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மீண்டும் ஒருதடவை அணியை சரிவில் இருந்து தூக்கி நிறுத்தி வெற்றிக்கு வழிசமைத்த சைமன்ஸ் ஆட்ட நாயகன். இந்த உலகக் கிண்ணத் தொடரில் இரு தடவைகள் மட்டுமே அவர் ஆட்டமிழந்துள்ளார். அவரது சராசரி 117.5 என்பது ஆச்சரியப்படத்தக்க உண்மை.

இந்த ஆட்டத்தில் தோற்றாலும், இலங்கை அணியின் பெறுபேறு பாராட்டப்படவேண்டிய ஒன்று. உலகக் கிண்ணப் போட்டிகளின் முன்னர் அரையிறுதி வரைக்கும் முன்னேறும் அணி என்ற எதிர்பார்ப்பை இலங்கை ஏற்படுத்தியிருக்கவில்லை. அந்த வகையில் ஜெயசூரியவின் அணி கடும் போராட்டத்தின் மத்தியில் தன் திறமையை நிரூபித்துள்ளது. நடுவரிசைத் துடுப்பாட்டத்தின் சரிவு தோல்விகளுக்கான மிக முக்கிய காரணம். அது நிவர்த்திக்கப்படவேண்டும்.

ஆஸ்திரேலியா இந்த ஆட்டத்தை வென்றதன் மூலம் மீண்டும் ஒரு தடவை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுவிட்டது. நாளை இந்தியா - கென்யா அணிகள் இடையே நடக்கும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வெல்லும் அணியுடன் அது இறுதியாட்டத்தில் மோதும். அதிலும் வென்றால் மூன்றாவது தடவையாக கிண்ணத்தை வென்ற ஒரே அணியென்ற பெருமையைப் பெறும்.

நாளை நடைபெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கென்யா ஏதாவது அதிர்ச்சி வைத்தியம் கொடுக்காவிட்டால் இந்தியா இறுதியில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளக்கூடும். அப்போது தாம் அமோக ஆதரவளித்த இலங்கையர்களால் செய்யமுடியாமற்போன காரியத்தைச் செய்வதற்கு அவர்கள் முயலக்கூடும். ஆஸ்திரேலியாவுடனான இந்தியாவின் ஆட்டம் என்பதைவிட சச்சினின் ஆட்டமாகத்தான் அது இருக்கும் என்று விமர்சனங்கள் எழும் இவ்வேளையில் இந்தியா என்ன செய்யும் என்பதே சுவாரஸ்யமான விடயம்.

- கனிமொழி.


## கண்ணீர் அஞ்சலி



எமது சாலை உத்தியோகத்தர்
திரு. V.K. சுந்தரம் அவர்களின்
செல்வப் புதல்வன்
**ஜனோஷன்**
அவர்களின் அகால மரணம் கேட்டு கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை.

கோண்டாவில். (15739)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
திரு.T.V.கிருஷ்ணசாமி அவர்களின் சகோதரி
**திருமதி செல்லம்மா குமாரசாமி**
அவர்கள் நேற்று (18.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்.உள்ளூராட்சித் திணைக்கள
உத்தியோகத்தர்கள்.

(15739)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**ஆசைப்பிள்ளை இராசம்மா**



திதி : 19.03.2003
தோற்றம் 10.01.1924
மறைவு 09.04.2001

எமது அன்புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்த இரண்டாம் ஆண்டை ஈரவிழிகளுடன் சந்திக்கும் பாச உறவுகளின் கண்ணீர்க் காணிக்கை.

'திருமகள் வாசம்'
ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாடம்.
நிகரை வீதி, சங்கானை.
தொ. இல. 070 212418 (15735)

- குடும்பத்தினர்.

**CHEMISTRY CENTRE**
பலாலி வீதி, கந்தர்மடம்.
**A/L 2004**
**"ORGANIC"**
Mon., Fri. 5-6 p.m.
**"CHEMISTRY PAPER"**
Mon., Fri. 6-7 p.m.
By:- அன்பழகன்
(37013)

லக்ஷ்மி இணுவில்
இன்றுமுதல்
விக்ரம், லைலா, வையாபுரி, நாசர் நடிக்க
**தில்** (ரீகல்)
தினசரி : 11.00, 3.00, 7.00
(15741)

**நிறைஞ்சனாஸ்**
பிரபு, வைஜெந்தி
நடித்த
**வண்ணத்தமிழ் பாட்டு**
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்
20 வரை
சரத்குமார், மீனா, வடிவேல், விஜயகுமார்
**மாயி** (ரீல்ஸ்)
10.30, 2.30, 6.30 மட்டும்
21 முதல் பகவதி
(C/37012)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா,
கவுண்டமணி, செந்தில் நடித்த
**சொக்கத்தங்கம்** (ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
(15655)


# புலிகளின் கடல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னின் விசேட தூதுவர் யசுசி அகாஷியை, அன்ரன் பாலசிங்கம் சந்தித்துப் பேசினார். சுமார் 45 நிமிட நேரம் இந்துப் பேச்சுக்கள் நீடித்தன. அடேல் பாலசிங்கமும் பேச்சுக்களில் பங்குபற்றினார்.

நேற்று மதியம் இரு தரப்பு பிரதிநிதிகள் குழுவுக்கும் அகாஷி மதிய விருந்தளித்தார்.

அதன் பின்னர் பிற்பகல் 3 மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகின.

பேச்சு மேசையின் நடுவே நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸனும் அவருக்கு இருபுறத்திலும் எரிக் சொல்ஹெய்மும், இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கும் அமர்ந்திருந்தனர்.

மேசையின் இரு புறங்களிலும் புலிகளின் பிரதிநிதிகளும் இலங்கை அரசின் பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். புலிகளின் தரப்பில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரும் அரச தரப்பில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புலிகளின் வள ஆளணியினராக ஜோய் மகேஸ்வரன், புலித்தேவன் ஆகியோரும் அரச குழுவுக்கு ஆதரவாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட உட்பட பல அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

முதல் நாள் பிற்பகலில் நடைபெற்ற முதல் அமர்வில் தாங்கள் வலியுறுத்தவுள்ள விடயங்கள் குறித்து அன்ரன் பாலசிங்கம் விளக்கினார்.

கிழக்கு ஆழ்கடலில் எமது எண்ணெய்த் தாங்கி கப்பல் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் மிகவும் மோசமானது; பாரதூரமானது.

யுத்தநிறுத்தம் நடைமுறையிலுள்ள வேளையில் கடற்படையினர் அதிகாரங்களை கையிலெடுத்துக் கொண்டு அத்துமீறி செயல்பட்டுள்ளனர். எனவே, இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாணவேண்டும். இதனையே முக்கிய விடயமாக நாம் இப்போது முன்வைக்கின்றோம்.

வடக்கு - கிழக்கு கடலில் புலிகளின் கலங்கள் தடையின்றிச் சென்றுவரவேண்டும். அதற்கு ஏற்ற வகையிலான விதிகளும் ஒழுங்குகளும் (Terms and Conditions) யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருக்கவேண்டும். அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வலியுறுத்துவோம்.

கடலிலோ, தரையிலோ எந்தப் பிரச்சினை வந்தாலும் இறுதித்தீர்மானம் - முடிவு எடுக்கும் அதிகாரம் கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கப்படவேண்டும். கடற்படையினர் தாம் நினைத்த மாதிரி - அத்துமீறி - நடவடிக்கை எடுத்து, விடுதலைப் புலிகளை அழிக்க முனைவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது, எனவே, சர்ச்சைகளுக்கு தீர்வுகாணும் அதிகாரத்தை கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கும் ஏற்பாடுகள் அவசியமாகின்றன.

கேள்வி: அப்படியானால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டும் என்று கூறுகின்றீர்களா?

பாலா: அப்படியல்ல. கண்காணிப்புக் குழுவின் பணியை மேம்படுத்தும் விதத்தில் சில ஏற்பாடுகளைச் சேர்த்துக் கொள்வது அவசியம். அந்தத் தேவையை நிறைவுசெய்யும் வழிகளை ஆராய்வோம்.

எமது எண்ணெய்த் தாங்கிக் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பான தனது அறிக்கையைக் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ளது. அந்தக் கப்பலில் ஆயுதங்கள் இருந்தன என்பதற்கு ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று கண்காணிப்புக் குழுவே திட்டவட்டமாக அதில் தெரிவித்துள்ளது. ஆனால், கடற்படை பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்து எமது கப்பலை - சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துத் தாக்கி அழித்துள்ளது. இத்தகைய சம்பவங்கள் தொடர்வதை இனிமேலும் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது - என்றார் பாலசிங்கம்.

(ஐ)

# கென்ய கிரிக்கெட்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சயமாக கடுமையான ஆட்டமாக இருக்காது.

சச்சின் டெண்டுல்கரை நாங்கள் வீழ்த்தும் பட்சத்தில் இந்தியாவின் துடுப்பாட்டம் பாதிக்கப்படும். அவருடன் ஷேவாக்கும் முக்கியமானவர். இந்த இருவரை விரைவாக ஆட்டமிழக்கச் செய்தால் அணியின் திறன் குறைந்து அலங்கோலமாகிவிடும்.

இந்திய அணியை விட கென்ய அணி களத்தடுப்பில் ஒருபடி மேலே உள்ளது. நாங்கள் உதிரி ஓட்டங்களைக் குறைப்பதில் கவனம் செலுத்தப்போகிறோம்.

இந்தியாவைத் தோற்கடிக்கும் வலிமை கென்யாவுக்கு இருக்கிறது என்பதில் ஒருவருக்குக் கூட நம்பிக்கையில்லாமல் இருப்பது ஆச்சரியமே.

நாங்கள் 'சுப்பர் சிக்ஸ்'க்குள் நுழைந்தபோதும், அரை இறுதிக்குத் தகுதிபெற்ற போதும் பலர் ஆச்சரியம தெரிவித்தார்கள். நாங்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றால் அவர்களது நடவடிக்கை என்னவாக இருக்கும் என ஆச்சரியப்படுகின்றேன்.

இந்த உலகக் கிண்ணம் கென்யாவின் உலகக்கிண்ணம் என்றே அழைக்கப்படும்.

இனிமேலும் நான் கென்யாவின் பயிற்றுநராகத் தொடரமாட்டேன். இந்திய கிரிக்கெட் சபை அளிக்கும் எந்த விதமான பணியையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

சிரேஷ்ட பயிற்றுநர் அல்லது 17 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்டாலும் சரி. ஆனால் அணியின் பயிற்றுநர் பொறுப்பைக் குறிவைக்கவில்லை.

பயிற்றுநராகுமாறு பங்களாதேஷிலிருந்து அழைப்பு வந்தது. ஆனால், என் தாய் நாட்டில் பணிபுரியவே விரும்புகின்றேன்.

இந்த வெற்றிகளால் கென்யவுக்குக் கிடைக்கும் பரிசுப் பணத்தில் எனக்கு எவ்வித பங்கும் இல்லை. அது பரவாயில்லை. தற்போது எங்களுக்கு கிடைத்த மரியாதை, பணத்தைவிட உயர்ந்தது என்றார்.

(ம-5)


## மரண அறிவித்தல்

**குமரகுருபரசுந்தரம் ஜனோஷன்**
*(யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி - தரம் 7 "B")*

நெடுந்தீவையும் தண்ணீர் ஊற்றையும் பிறப்பிடமாகவும், இல.42, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குமரகுருபரசுந்தரம் - பிறேமகுமாரி ஆகியோரின் அருமைப் புதல்வன் ஜனோஷன் நேற்று (18.03.2003) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பாணுஜனின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராமலிங்கம் வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர், நெடுந்தீவு), காலஞ்சென்ற வேலுப்பிள்ளை புஸ்பராணி (இளைப்பாறிய ஆசிரியை, நெடுந்தீவு), தண்ணீர் ஊற்று பொன்னையா விஸ்வலிங்கம், விஸ்வலிங்கம் சின்னம்மா ஆகியோரின அன்புப் பேரனும் கணபதிப்பிள்ளை பரமேஸ்வரநாயகி (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), மகேந்திரராசா அமரசோதி (நல்லூர் விக்கினேஸ்வரா வித்தியாலம்), ரவிக்குமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் (தண்ணீர்ஊற்று), மதனகுமார் (வவுனியா), ஈஸ்வரகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் மருமகனும் கமலகுமாரி தவராஜா (தண்ணீர் ஊற்று), விமலகுமாரி திருச்செல்வம் (அரசவைத்தியசாலை, திருகோணமலை), வசந்தகுமாரி சிவகுரு (ப.நோ.கூ.சங்கம் தண்ணீர் ஊற்று), விஜயகுமாரி சிவராஜா (ஆசிரியை திருகோணமலை), நளாயினி தேவி கனகசுந்தரம் (வவுனியா), தில்லைநாயகி ஆலாலசுந்தரம் (நெடுந்தீவு) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2003) வியாழக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
திரு.திருமதி குமரகுருபரசுந்தரம்
(வ.பி.போ.சபை, சி.சா.பரிசோதகர்)

(15737)

## ஈராக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாவைச் சந்திக்கிறது இந்தியா.

இந்நிலையில் ஆட்டம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என ஐ.சி.சி. அதிகாரி காசிம் டாக்ரட் தெரிவித்தார். எனினும் டுபாய் மற்றும் வங்கதேசத்துக்கு அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவிருந்த தென் ஆபிரிக்க அணியின் சுற்றுப் பயணம் சற்றுத் தள்ளிப் போகக் கூடும் எனவும் அவர் கூறினார்.

ஈராக்கில் போர் வெடிக்கும் சூழலில் ஆட்டம் நடைபெறும் இடங்களில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. நிர்வாகிகள் நம்பிக்கையுடன் உள்ளனர். (ஐ)

## அமைச்சரவை ஆராய்வு

கொழும்பு,மார்ச்19

வடக்கு - கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோர வசதியாகத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது பற்றி நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

சட்டத் திருத்தம் கொண்டுவந்து புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். (ஐ)

## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்

சிங்கர்

புதிய பார்வை

இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : ஆஸ்திரேலியா

ஆட்டநாயகன் : அன்ரூ சைமன்ஸ்

முடிவு : 48 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி (டக்வோர்த் லூயிஸ் முறைப்படி)

### ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ஏ.கில்கிறிஸ்ட் | c/சங்கக்கார | b/டி.சில்வா .... | 22 | 20 | 2 | 1 |
| எம்.ஹைடன் | c/திலஹரட்ண | b/வாஸ் .... | 20 | 38 | 2 | 0 |
| ஆர்.பொன்ரிங் | c/ஜயசூரிய | b/வாஸ் .... | 02 | 08 | 0 | 0 |
| டி.லீமன் | | b/ஜயசூரிய .... | 36 | 66 | 2 | 0 |
| எ.சைமன்ஸ் | not out | .... | 91 | 118 | 6 | 1 |
| எம்.பெவன் | c/சங்கக்கார | b/ஜயசூரிய .... | 00 | 01 | 0 | 0 |
| ஜீ.ஹோக் | st/சங்கக்கார | b/டி.சில்வா .... | 08 | 19 | 0 | 0 |
| ஐ.ஹார்வி | c/சங்கக்கார | b/வாஸ் .... | 07 | 10 | 0 | 0 |
| ஏ.பிக்சல் | not out | .... | 19 | 21 | 0 | 1 |
| உதிரிகள் | | .... | 07 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | .... | 212/7 | | | |

களமிறங்காதவர்கள்: பி.லீ, ஜி.மெக்ராத்.

வாஸ்: 10-01-34-03, குணரட்ண: 08-00-60-00, டி.சில்வா:10-00-36-02, முரளிதரன்: 10-00-29-00, ஜயசூரிய: 10-00-42-02, ஆர்னல்ட்:02-00-08-00

### இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எம்.அத்தபத்து | | b/லீ .... | 14 | 17 | 3 | 0 |
| எஸ்.ஜயசூரிய | c/சைமன்ஸ் | b/மெக்ராத் .... | 17 | 24 | 0 | 1 |
| ஏச்.திலஹரட்ண | c/கில்கிறிஸ்ட் | b/லீ .... | 03 | 15 | 0 | 0 |
| ஏ.குணவர்த்தன | c/பொன்ரிங் | b/லீ .... | 01 | 04 | 0 | 0 |
| டி.சில்வா | runout (பிக்சல்) | .... | 11 | 16 | 2 | 0 |
| கே.சங்கக்கார | not out | .... | 39 | 70 | 3 | 0 |
| எல்.ஜயவர்த்தன | c/கில்கிறிஸ்ட் | b/ஹோக் .... | 05 | 08 | 1 | 0 |
| ஆர்.ஆர்னல்ட் | c/லீ | b/ஹோக் .... | 03 | 27 | 0 | 0 |
| எஸ்.வாஸ் | not.out | .... | 21 | 50 | 1 | 1 |
| உதிரிகள் | | .... | 09 | | | |
| மொத்தம் | (38.1 ஓவர்கள்) | .... | 123/7 | | | |

களமிறங்காதவர்கள்: எம்.முரளி, பி.குணரட்ண.

மெக்ராத்:07-01-20-01, லீ:08-00-35-03, பிக்சல்: 10-04-18-00
ஹோக்:10-01-30-02, ஹார்வி: 2.1-00-11-00, லீமன்: 01-00-04-00

ஆட்டத்தின் 38.1 ஆவது ஓவர்களில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்களைப் பெற்ற போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் தொடரமுடியாததை அடுத்து டக்வோர்த் லூயிஸ் முறைப்படி ஆஸ்திரேலியா 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது என அறிவிக்கப்பட்டது.


மங்களகரமான திறப்பு விழா

இதுவரை காலமும் முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பில் இயங்கிவந்த எமது ஸ்தாபனமான

பொன்னரசி நகையகம்

இன்று (19.03.2003) புதன்கிழமைமுதல் தனது சேவையை *இல. 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரியில் ஆரம்பிக்கவுள்ளது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*76, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15690) - உரிமையாளர்.


# கண்காணிப்புக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பேச்சுகளின் முதல் அமர்வு முடிவுற்ற பின்னர் அப்பேச்சுகளின் போது ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து செய்தியாளர்களுக்கு அவர் தகவல் வெளியிட்டார். அப்போது அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

*கேள்வி:* திருகோணமலைக்கு அப்பால் ஆழ்கடலில் புலிகளின் கப்பல் தகர்க்கப்பட்டது குறித்து பேசினீர்களா?

*பாலா:* திருமலைக்கு அப்பால் 220 கடல்மைல் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் எமது வர்த்தகக் கப்பலை வழிமறித்து தாக்கி அழித்தமை வெறும் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் மட்டுமல்ல, சர்வதேச கடல் சட்ட நியமங்களையும் மீறும் செயலாகும்.

கப்பல் தகர்க்கப்பட்ட இடம் குறித்து ஆரம்பம் முதல் வெவ்வேறு தூரங்களை குறிப்பிட்ட அரசுத் தரப்பு கடைசியாக தமது பொருளாதார வலயத்துக்கு 186 கடல்மைல் தொலைவில் இது நடந்ததாக தெரிவித்தது. அது முற்றிலும் தவறானது என நாம நிராகரித்தோம். இது சம்பந்தமாக கண்காணிப்புக்குழு இறுதியாக வெளியிட்ட தீர்ப்பையும் அவர்களுக்கு (அரசுத் தரப்புக்கு) நாம் எடுத்துக் காட்டினோம்.

இக்கப்பல் புலிகளின் வர்த்தக கப்பல் என்பதை கண்காணிப்புக்குழு ஏற்றுள்ளது. ஸ்ரீலங்கா கடற்படை இவ்விடயம் தொடர்பாகத் தங்களை (கண்காணிப்புக்குழுவை) அழைக்காமல் தான்தோன்றித்தனமாகத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது என்பதை கண்காணிப்புக்குழு பூடகமாக - சூசகமாக - அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. அத்தோடு, இக்கப்பல் ஆயுதங்களைக் கடத்திச் சென்றது என்பதற்கு ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றும் கண்காணிப்புக் குழு சுட்டிக் காட்டியுள்ளது. இவற்றை அரசுத் தரப்புக்கு எடுத்துரைத்தோம். கண்காணிப்புக்குழுவை மீறி, விஞ்சி, சுயேச்சையாக, தனித்துவமாக ஒரு தலைப்பட்சமாக அரசுத் துருப்புகள் எடுத்த தவறான நடவடிக்கை இது என்பதை தெளிவுபடுத்தினோம்.

இவ்வளவு ஆத்திரமூட்டலுக்குப் பின்னரும் நாம் பொறுமை காத்துள்ளோம். சமாதான முயற்சிகளில் எமக்கு உள்ள ஆர்வத்தை - ஈடுபாட்டை - பொறுப்பை வெளிப்படுத்தினோம் என்பதையும் சுட்டிக் காட்டினோம்.

பேராசிரியர் பீரிஸ் தமது அரசின் கடற்படை எடுத்த நடவடிக்கையை நியாயப்படுத்தினார். நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் நிலைநாட்டவே கடற்படை அந்த நடவடிக்கையை எடுத்ததாக அவர் கூறினார்.

ஒருபெயருக்கு அதை ஏற்றால் கூட அத்தகைய தாக்குதலை நடத்துவது புரிந்துணர்வு ஒப்பந்தமீறல் என்பதை நாம் விளக்கினோம். ஒப்பந்தத்தில் சரத்து 1.5இன்படி இலங்கை கடற்படை தனது இறையாண்மையை நிலைநாட்டலாம். ஆனால், புலிகள் மீது வலிந்து தாக்குதல்களை நடத்த முடியாது. இதை நாம் திட்டவட்டமாக - தெளிவாக - சுட்டிக்காட்டினோம். இத்தகைய தவறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வது அவசியம் என்பதை நாம் வலியுறுத்தினோம். அதன் அடிப்படையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. இத்தகைய செயல்கள் இனிமேல் இடம்பெறாமல் தடுப்பதாயின் கண்காணிப்புக் குழுவுக்கு சில அதிகாரங்களை நாம் வழங்கவேண்டும். கடலிலோ, தரையிலோ நடக்கும் சம்பவங்கள், யுத்தநிறுத்த மீறல்கள் போன்றவை குறித்து கண்காணிப்புக்குழுவே விசாரித்து முடிவெடுக்கின்ற அதிகாரத்தை கண்காணிப்புக்குழுவுக்கு நாங்கள் இரண்டு தரப்பினரும் வழங்க வேண்டும்.

எமது விடயங்களில் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக - ஒரு தலைப்பட்சமாக அரசுப் படைகள் தலையிடுவதோ, தாக்குதல் நடத்துவதோ அல்லது எமது போராளிகளை கைதுசெய்து பொலீஸாரிடம் ஒப்படைப்பதோ இனி ஏற்றுக்கொள்ள முடியாதவை எனக் கூறினோம்.

### கிளிநொச்சியில் மாநாடு

நாங்களும் அரசுத் தரப்பும் கண்காணிப்புக்குழுவுடன் ஒரு மாநாட்டைக கூட்டி இது குறித்து ஆராயலாம். புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கை அப்படியே இருக்க சில அதிகாரங்களை கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கலாம் என ஆலோசனை கூறினோம். கூடுதலாக சில கட்டபாடுகளை - வரையறைகளை - நிபந்தனைகளை கண்காணிப்புக்குழுவினருக்கு வழங்கி அவர்களையே யுத்தநிறுத்த நடவடிக்கைகளை பேணும்படி கோரலாம் என நாம் கேட்டுக்கொண்டோம். அந்த யோசனையை அரசுத் தரப்பு ஏற்றுக் கொண்டது.

அதன் பிரகாரம் அரசு - புலிகள் - கண்காணிப்புக்குழுவினர் மற்றும் கடற்படையினர் அடுத்த மூன்றுவார காலத்துக்குள் கிளிநொச்சியில் கூடி, கண்காணிப்புக்குழுவினருக்கு அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து முடிவெடுப்பர். அதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

*பாலா:* ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்களிலும் இதுகுறித்து வலியுறுத்தி வருகின்றோம். இம்முறையும் பேசினோம். நாங்கள் பேச்சு மேசையில் போடும் அழுத்தங்கள் காரணமாக அங்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், இப்போது சில பாரதூரமான சம்பவங்களுடன் தொடர்புபட்ட வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட நூறுபேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். எஞ்சியோர் விடுவிக்கப்பட்டுவிட்டனர். தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

★ தங்களின் சொந்த இடங்களில உள்ள சிறைகளுக்கு அவர்களை மாற்றவேண்டும். இந்த கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளதாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் மிலிந்த கூறினார்.

★ அடுத்த கோரிக்கை அவர்களுக்கு பிணை வழங்குவது சம்பந்தமானது - அதற்கும் சில ஒழுங்குகள், ஏற்பாடுகள் செய்யப்படுவதாக எமக்கு உறுதியளிக்கப்பட்டது.

★ மிகவும் பாரதூரமான சம்பவங்களுடன் தொடர்புபட்ட வழக்குகளை தாமதப்படுத்தாமல் துரிதப்படுத்தி விசாரிக்கவும் உறுதி தரப்பட்டுள்ளது - இவை நிறைவேற்றப்படாவிட்டால் கைதிகள் தாம் இடைநிறுத்தியுள்ள உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பித்து விடுவார்கள். அப்படி அவர்கள் அறிவித்துள்ளனர்.

### கைதிகள் விடயம்

கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. நாம் அதை வலியுறுத்தினோம் ஆனால், அது ஜனாதிபதி குமாரதுங்க செய்ய வேண்டியது. தமிழ்க் கைதிகளை அவர் அப்படி விடுவிப்பார் என நாம் நம்பவில்லை. எனவே, இது குறித்து அரசுத் தரப்பின் பிரதிநிதிகளாலும் அக்கறை காட்டமுடியவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக அகற்றிவிடுமாறு நாம் கோரினோம். ஆனால், அதைத் தாங்கள் மாற்றியமைப்பது குறித்து ஆலோசிப்பதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டது. இது மனித உரிமைகள் விடயத்துடன் தொடர்புபட்டது என்பதால் அதை நிச்சயம் செய்வோம் என அரசுத் தரப்பினர் கூறுகின்றனர்.

*கேள்வி:* திருகோணமலையில் கைதான மூன்று புலிகள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனரே?

*பாலா:* அரசுப் படையினரோ, எமது போராளிகளோ ஒருதரப்பினர், மறுதரப்பினரால் கைதுசெய்யப்படும்போது கண்காணிப்புக் குழுவினரிடமே ஒப்படைக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. கண்காணிப்புக்குழுவும் இதை ஏற்றுக்கொண்டு எங்களுக்கு கடிதம் எழுதியுள்ளது. அடுத்து மூன்று வாரகாலத்துக்குள் கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் இது குறித்து ஆராய்ந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படும். கண்காணிப்புக்குழுவினருக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படும்போது இத்தகைய விடயங்கள் சுலபமாகத் தீர்க்கப்படும் வாய்ப்புக் கிட்டும்.

### இன்றைய பேச்சு

*கேள்வி:* அடுத்துவரும் நாள்களில் எதைப் பற்றிப் பேசுவீர்கள்?

*பாலா:* நாளைய (புதன்கிழமை) கூட்டத்தில் 'சிரான்' உபகுழு குறித்தும் அதன் செயற்பாடுகளை விஸ்தரிப்பது குறித்தும் ஆராயப்படும். அத்தோடு, ஜப்பானில் ஜூனில் நடைபெறும் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கவேண்டிய யோசனைகள் குறித்தும் நாளை (புதன் கிழமை) நடைபெறும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும். ஜப்பானிய விசேட பிரதிநிதி ஜசுசி அகாஷியும் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றார். அவசர மனிதாபிமான பணிகளான புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் ஆகியவை தொடர்பான திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்படும். (ஐ)

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் பலவந்தமாகக் கடத்திச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கடத்திச் செல்லப்பட்ட இந்த யுவதி அன்று இரவு 11 மணியளவில் அவரது வீட்டுக்கு அருகே மயங்கிய நிலையில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

பல மணிநேரமாக யுவதியைத் தேடித்திரிந்த உறவினர்கள் மயங்கிய நிலையில் அவரைக் கண்டு மீட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் அன்று நள்ளிரவே அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்த இளம் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் சம்பவம் சாவகச்சேரிப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (ஐ-9-117)


LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992

(C/26688)



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 22.03.2003 இற்கு முன் நேரில்

MCS

SDW SDW SDW SDW SDW SDW SDW SDW SDW


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.